



PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்

# பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY






சென்னை மலர்: 01 இதழ்: 252 24.04.2026 வெள்ளிக்கிழமை


Chennai | Volume: 01 | Issue: 252 | Friday | pages 8 | Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY


# தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 82.24% வாக்குப் பதிவு

## கரூர் – 89.32% | கன்னியாகுமரி – 73.44%









**சென்னை, ஏப்.24:**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப் பதிவு இன்று காலை 7 மணிக்கு தொடங்கி நடைபெற்று வருகிறது. மக்கள் ஆர்வத்துடன் வரிசையில் நின்று வாக்களித்து வருகின்றனர். மாலை 5 மணி நிலவரப்படி 82.24% சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன. அதிகபட்சமாக கரூரில் 89.32% வாக்குகள் பதிவாகியுள்ளன. குறைந்தபட்சமாக கன்னியாகுமரியில் 73.44% வாக்குகள் பதிவாகியுள்ளன.

தலைநகர் சென்னையில் மாலை 5 மணி நிலவரப்படி 81.34% வாக்குகள் பதிவாகியுள்ளன. இவற்றில் தொகுதி வாரியாகப் பார்த்தால் சென்னை டாக்டர் ராதாகிருஷ்ணன் நகரில் அதிகபட்சமாக 87.12% வாக்குகளும், குறைந்தபட்சமாக மயிலாப்பூரில் 72.79% வாக்குகளும் பதிவாகியுள்ளன.

பிரபலங்கள் வாக்களிப்பு: வாக்குச் சாவடிக்கு வழக்கம் போல் காலையிலேயே வந்த நடிகர் அஜித் குமார் திருவான்மியூர் வாக்குச் சாவடியில் முதல் நபராக வாக்களித்துச் சென்றார்.

தமிழக சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவரும், அதிமுக பொதுச் செயலாளருமான எடப்பாடி பழனிசாமி, சேலம் மாவட்டம் எடப்பாடி தொகுதிக்கு உட்பட்ட சிலுவம்பாளையம் தொகுதியில் குடும்பத்துடன் வந்து மக்களோடு மக்களாக வரிசையில் காத்திருந்து வாக்களித்தார்.

சென்னையில் தவெக தலைவர் விஜய், நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த், அதிமுக முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார், பாஜக மூத்த தலைவரும் மயிலாப்பூர் தொகுதி வேட்பாளருமான தமிழிசை சவுந்தர்ராஜன், பாஜக மாநில துணைத் தலைவர் குஷ்பு அவரது கணவரும் மதுரை மத்திய தொகுதி வேட்பாளருமான சுந்தர்.சி, நடிகர் ரஜினி காந்த், நடிகர் சிவகார்த்திகேயன், இயக்குநர் மணிரத்னம், நடிகர்கள் சிவக்குமார், ஜீவா, நடிகை த்ரிஷா, நடிகர் சூர்யா அவரது மனைவி ஜோதிகா எனப் பல்வேறு பிரபலங்களும் வாக்களித்தனர்.

களத்தில் 4,023 வேட்பாளர்கள் : தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் 234 தொகுதிகளிலும் ஒரே கட்டமாக இன்று நடைபெறுகிறது. 4,023 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். 5.73 கோடி பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். இவர்களில் 14.59 லட்சம் பேர் முதல்முறை வாக்காளர்கள்.

தமிழகம் முழுவதும் 249 மாதிரி வாக்குச்சாவடிகள், 325 அனைத்து மகளிர் வாக்குச்சாவடிகள், 71 மாற்றுத் திறனாளிகள் பணியாற்றும் வாக்குச்சாவடிகள், 79 இளம் பணியாளர்கள் பணியாற்றும் வாக்குச்சாவடிகள் என மொத்தம் 33,211 இடங்களில் 75,064 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

5,949 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை என்று அடையாளம் காணப்பட்டுள்ளன. இங்கு நுண்பார்வையாளர்கள், துப்பாக்கி ஏந்திய போலீஸார் அல்லது துணை ராணுவப் படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு பணியில் துப்பாக்கி ஏந்திய 300 கம்பெனி துணை ராணுவப் படையினர் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் 24 மணி நேரமும் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் 83,875 காவல் துறை பணியாளர்கள், 40,427 காவல் துறை அல்லாத முன்னாள் ராணுவத்தினர் உள்ளிட்ட பணியாளர்களும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், மாலை 5 மணி நிலவரப்படி 82.24% சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன. அதிகபட்சமாக கரூரில் 89.32% வாக்குகள் பதிவாகியுள்ளன. குறைந்தபட்சமாக கன்னியாகுமரியில் 73.44% வாக்குகள் பதிவாகியுள்ளன.

# மேற்கு வங்காள சட்டசபை தேர்தல்: 89.93% வாக்குப் பதிவு



**புதுடெல்லி, ஏப்.24:**

மேற்கு வங்காளத்தின் பதவிக்காலம் மே 7-ந்தேதியுடன் முடிவடைகிறது. இதனை முன்னிட்டு, 294 சட்டசபை தொகுதிகளை கொண்ட மேற்கு வங்காளத்தில் 2 கட்டங்களாக தேர்தல் நடைபெறுகிறது. இதன்படி, ஏப்ரல் 23-ந்தேதி (இன்று) 152 தொகுதிகளுக்கான முதல் கட்ட தேர்தலும், 29-ந்தேதி மீதமுள்ள 142 தொகுதிகளுக்கான 2-ம் கட்ட தேர்தலும் நடத்தப்படும். வாக்கு எண்ணிக்கை மே 4-ந்தேதி நடைபெறும் என இந்திய தலைமை தேர்தல் ஆணையம் அறிவித்தது.

இதனை முன்னிட்டு, அரசியல் கட்சிகள் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தியும், தொகுதி பங்கீடு, வேட்பாளர் தேர்வு, தேர்தல் அறிக்கை தயாரித்தல் உள்ளிட்ட பணிகளை முடித்து, தீவிர பிரசார பணிகளில் ஈடுபட்டன. ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க. இடையே பலத்த போட்டி காணப்படுகிறது. ஆட்சியை தக்க வைக்கும் முனைப்பில், முதல்-மந்திரி மம்தா பானர்ஜி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

அவருக்கு போட்டியாக ஆட்சியை கைப்பற்றும் நோக்கில், பா.ஜ.க.வின் தலைவர்களும் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர். அரசியல் கட்சி தலைவர்கள் கடும் வெயிலிலும், தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு, பொதுமக்களை சந்தித்து, வாக்குகளை சேகரித்தனர்.

மேற்கு வங்காளத்தில் அனல் பறந்த தேர்தல் பிரசாரம் கடந்த 21-ந்தேதி மாலை 6 மணியுடன் முடிவடைந்தது. இந்நிலையில், மாதிரி வாக்குப்பதிவு இன்று காலை தொடங்கி நடந்தது.

அதற்கு முன்பு, வாக்குச்சாவடி மையங்களுக்கு வாக்குப்பதிவு இயந்திரங்களை அனுப்பும் பணி நேற்று நடந்தது. அந்தந்த மாவட்டங்களில் உள்ள அரசு அலுவலகங்களில் இருந்து மையங்களுக்கு, வாக்குப்பதிவுக்கு தேவையான பொருட்களுடன் இயந்திரங்கள் பலத்த போலீஸ் பாதுகாப்புடன் அனுப்பி வைக்கப்பட்டன.

மேற்கு வங்கத்தில் நேற்று (23ம் தேதி) நடைபெற்ற முதல் கட்டத் தேர்தலில் மாலை 5 மணி நிலவரப்படி 89.93% சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளன.

அலிபுர்துவாரில் 88.74% வாக்குகளும், பன்குராவில் 89.91% வாக்குகளும், பிர்பும்-ல் 91.55% வாக்குகளும் பதிவாகி உள்ளன. கூச் பெஹாரில் 92.07%, தெற்கு தினாஜ்பூரில் 93.12%, டார்ஜிலிங்கில் 86.49%, ஜல்பைகுரியில் 91.20%, ஜார்கிராமில் 90.53%, கலிம்போங்-ல் 81.98%, மால்டாவில் 89.56% வாக்குகள் பதிவாகி உள்ளன. முர்ஷிதாபாத்தில் 91.36%, மேற்கு பர்த்துவானில் 86.89%, மேற்கு மிட்னாபூரில் 90.70%, கிழக்கு மிட்னாபூரில் 88.55%, புருலியாவில் 87.35%, வடக்கு தினாஜ்பூரில் 89.74% வாக்குகள் பதிவாகி உள்ளன.

மேற்கு வங்கத்தில் காலை 11 மணி நிலவரப்படி 41.11% வாக்குகளும், மாலை 3 மணி நிலவரப்படி 78.77% வாக்குகளும் பதிவாகிய நிலையில், மாலை 5 மணி நிலவரப்படி 89.93% வாக்குகள் பதிவாகி உள்ளன. 3.60 கோடி வாக்காளர்கள் தங்கள் வாக்குகளைச் செலுத்தியுள்ளனர்.

ஒரு சில தொகுதிகளில் அசம்பாவித சம்பவங்கள் நடந்தாலும், பொதுவாக வாக்குப்பதிவு அமைதியாக நடைபெற்று வருகிறது. அதிகாலை முதலே மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து தங்கள் ஜனநாயகக் கடமைகளை ஆற்றியுள்ளார்கள்..

மேற்கு வங்கத்தில் மொத்தம் 294 சட்டப்பேரவைத் தொகுதிகள் உள்ளன. இங்கு இன்று முதற்கட்டமாக 152 தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெற்று வருகிறது. இதில், மொத்தம் 1,478 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். 3.60 கோடி வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். மத்திய பாதுகாப்புப் படைகளை சேர்ந்த 2.4 லட்சம் வீரர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர்.

# வாக்களிப்பதை வீடியோ எடுத்து ரீல்ஸ் போட்ட தவெகவை சேர்ந்தவர் கைது



**சென்னை, ஏப்.24:**

தமிழக சட்டசபைக்கு ஒரேகட்டமாக நேற்று (வியாழக்கிழமை) தேர்தல் நடைபெற்றது. இந்த தேர்தலில் மொத்தம் 4,023 வேட்பாளர்கள் களத்தில் போட்டியிடுகின்றனர். இந்த தேர்தலுக்காக தமிழகம் முழுவதும் 75 ஆயிரத்து 64 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு உள்ளன.

காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியதில் இருந்து வாக்காளர்கள் தங்களது பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிக்கு சென்று நீண்ட வரிசையில் காத்திருந்து ஜனநாயக கடமை ஆற்றி வருகின்றனர். வாக்குசெலுத்திவிட்டு கை விரலில் மை வைத்ததை வாலிபர்கள், இளம்பெண்கள் புகைப்படம் எடுத்து சமூக வலைதளங்களில் பதிவிட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், திருப்பத்தூர் தொகுதியில் விசில் சின்னத்திற்கு வாக்களிப்பதை செல்போனில் வீடியோ எடுத்து சமூக வலைதளங்களில் ரீல்ஸ் ஆக வெளியிட்ட தவெகவைச் சேர்ந்த சக்திவேல் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாருக்கு ஓட்டு போட்டோம் என்பதை இணையதளத்தில் வெளியிட்டால் சிறை தண்டனை விதிக்கப்படும் என தேர்தல் ஆணையம் எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில், வாக்குச்சாவடிக்குள் அவர் வீடியோ எடுப்பதை சிசிடிவி மூலம் அதிகாரிகள் உறுதி செய்ததை அடுத்து அவரை போலீசார் கைது செய்துள்ளனர்.

# மாவட்ட வாரியாக பதிவான வாக்குகள்...?



**சென்னை, ஏப்.24:**

தமிழக சட்டசபை தேர்தல் விறுவிறுப்பாக நடைபெற்றது. காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 6 மணிவரை நடைபெற்றது.

இந்நிலையில், தமிழக சட்டசபை தேர்தலில் மாலை 5 மணி நிலவரப்படி 82.24 % வாக்குகள் பதிவாகியுள்ளன.

மாவட்ட வாரியாக பதிவான வாக்குகள் முழு விவரம்:-

அரியலூர் - 83.09 %
செங்கல்பட்டு - 82.41 %
சென்னை - 81.34 %
கோவை - 82.33 %
கடலூர் - 81.91 %
தருமபுரி - 87.28 %
திண்டுக்கல் - 86.35 %
ஈரோடு - 87.59 %
கள்ளக்குறிச்சி - 84.22 %
காஞ்சிபுரம் - 84.92 %
கன்னியாகுமரி - 73.44 %
கரூர் - 89.32 %
கிருஷ்ணகிரி - 82.40 %
மதுரை - 77.89 %
மயிலாடுதுறை - 78.41 %
நாகை - 83.15 %
நாமக்கல் - 87.63 %
பெரம்பலூர் - 82.75 %
புதுக்கோட்டை - 81.55 %
ராமநாதபுரம் - 74.41 %
ராணிப்பேட்டை - 86.28 %
சேலம் - 88.02 %
சிவகங்கை - 74.44 %
தென்காசி - 79.28 %
தஞ்சாவூர் - 78.07 %
நீலகிரி - 75.90 %
தேனி - 78.73 %
திருவள்ளூர் - 80.70 %
திருவாரூர் - 80.65 %
தூத்துக்குடி - 77.56 %
திருச்சி - 82.76 %
திருநெல்வேலி - 75.10 %
திருப்பத்தூர் - 85.28 %
திருப்பூர் - 86.33 %
திருவண்ணாமலை - 85.59 %
வேலூர் - 85.06 %
விழுப்புரம் - 85.45 %
விருதுநகர் - 82.16 %

## இன்றைய நாள்

வெள்ளிக்கிழமை
(24–04–2026)
பராபவ ஆண்டு, சித்திரை–11
பிறை: வளர்பிறை
திதி
அஷ்டமி நள்ளிரவு வரை
பிறகு நவமி.
நட்சத்திரம்:
பூசம் நள்ளிரவு 12.37 வரை
பிறகு ஆயில்யம்.
யோகம்
மரண யோகம்
ராகுகாலம்
காலை 10.30–12.00 மணி
எமகண்டம்
பிற்பகல் 3.00–4.30 மணி.
சூலம் – மேற்கு
நல்ல நேரம் :
காலை 6–7 மணி.
மாலை 5–6 மணி.

மேஷம் ...................... நட்பு
ரிஷபம்........................ நலம்
மிதுனம் ................ நன்மை
கடகம் ...................... லாபம்
சிம்மம் ......................புகழ்
கன்னி ......................அன்பு
துலாம் .................. தாமதம்
விருச்சிகம்........... மகிழ்ச்சி
தனுசு .................. அமைதி
மகரம் ...................... பாசம்
கும்பம்.....................பணிவு
மீனம் .................. உவகை

# நாங்குநேரியில் பெரும்பத்து கிராமத்தில் தேர்தல் புறக்கணிப்பு




**நாங்குநேரி, ஏப்.24:**

தமிழக சட்டமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு தொடங்கி நடைபெற்று வருகிறது. நெல்லை மாவட்டம் முழுவதும் 1,680 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவையனைத்திலும் மக்கள் ஆர்வமுடன் நீண்ட வரிசையில் காத்திருந்து தங்களது வாக்கினை பதிவு செய்து வருகின்றனர்.

இந்த நிலையில், நெல்லை மாவட்டம் நாங்குநேரி பெரும்பத்து கிராமத்தில் உள்ள 290-வது வாக்குச்சாவடியில் 969 வாக்காளர்கள் அனைவரும் ஓட்டுப்போட செல்லாமல் தேர்தல் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். 4 மணி நேரமாகியும் மக்கள் வாக்களிக்க செல்லாமல் வீடுகளிலேயே முடங்கி உள்ளனர். இதனால் வாக்குச்சாவடி வெறிச்சோடி காணப்படுகிறது.

கடந்த மார்ச் 2-ம் தேதி நடைபெற்ற இரட்டை கொலை சம்பவத்தில் நீதி கிடைக்கவில்லை எனக்கூறி தேர்தலை புறக்கணித்துள்ளனர்.



# கரூரில் வாக்கு செலுத்திய ஜோதிமணி




**கரூர், ஏப்.24:**

"ஜனநாயகத்தில் வாக்கை விட வலிமையான சக்தி ஏதுவுமில்லை. தவறாமல் வாக்களிப்போம்" என கரூர் எம்.பி. செ.ஜோதிமணி தெரிவித்துள்ளார்.

கரூர்மாவட்டம்அரவக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட பெரிய திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச் சாவடி மையத்தில் இன்று (ஏப். 23ம் தேதி) காலை கரூர் எம்.பி. செ.ஜோதிமணி வாக்களித்தார்.

பின்னர் அவர் கூறும்போது, "ஒவ்வொரு முறையும் நான் படித்த எமது பெரியதிருமங்கலம் அரசினர் ஆரம்பப் பள்ளியில் வாக்களிப்பதில் பெருமை. ஜனநாயகத்தில் வாக்கை விட வலிமையான சக்தி ஏதுவுமில்லை. தவறாமல் வாக்களிப்போம்" என தெரிவித்தார்.

கரூர் தொகுதி அதிமுக வேட்பாளரும், முன்னாள் அமைச்சருமான எம். ஆர். விஜயபாஸ்கர் கரூர் ஆண்டாங்கோவில் கிழக்கு அரசு உயர்நிலைப் பள்ளியில் உள்ள வாக்குச் சாவடி அவரது வாக்கினை செலுத்தினார்.

# "விஜய் வாக்குகளைப் பிரிப்பார்; பழனிசாமி முதல்வராவார்"

## நயினார் நாகேந்திரன் பேட்டி



**நெல்லை, ஏப்.24:**

"விஜய் அனைத்து தொகுதிகளிலும் வாக்குகளை பிரிப்பார். தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைக்கும். எடப்பாடி பழனிசாமி முதல்வர் ஆவார்" என பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

பாஜக மாநிலத் தலைவரும் சாத்தூர் சட்டமன்றத் தொகுதி பாஜக வேட்பாளருமான நயினார் நாகேந்திரன் தனது சொந்த ஊரான திருநெல்வேலி பாளையங்கோட்டையில்உள்ள மகாராஜா நகர் ஜெயேந்திர பள்ளியில் தனது வாக்கினை பதிவு செய்தார்.

இதனைத் தொடர்ந்து அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், "திருநெல்வேலி மற்றும் சாத்தூர் தொகுதி இரண்டும் எனது கண்கள் ஒரு நல்ல அரசாங்கத்தை தேர்ந்தெடுப்பதற்கு மக்களுக்கு ஒரு வாய்ப்பு ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை கிடைத்துள்ளது.

அந்த வாய்ப்பாக இந்த நாள் அமைந்துள்ளது. இந்த நாளில் அனைத்து வாக்காள பெருமக்களும் நாட்டின் நலன் கருதி, நாட்டு மக்களுடைய நலன் கருதி, எதிர்கால சந்ததியின் நலன் கருதி, தமிழகத்தில் போதைப் பொருட்கள் இல்லாமல் இருக்க வேண்டி எதிர்கால சந்ததிகள் நல்ல முறையில் வாழ வழிகாட்டும் நாளாக விலைமதிப்பு இல்லாத வாக்குரிமையை பயன்படுத்த வேண்டும்.

7 மணிக்கு தொடங்கிய வாக்குப் பதிவில் வாக்குச்சாவடி களில் 500-க்கும் மேற்பட்டோர் நீண்ட வரிசையில் காத்திருந்து வாக்களிக்கிறார்கள். அவர்கள் முதல்வராக யார் வர வேண்டும் எனத் தீர்மானிப்பார்கள். கடந்த ஐந்து ஆண்டுகளாக முதல்வராக இருந்த ஸ்டாலின் நல்லாட்சியை தரவில்லை எனக் கண்கூடாக தெரிகிறது. பெண்கள் கண்ணீர் வடிக்கும் மாநிலமாக தமிழகம் உள்ளது . தமிழகம் மீண்டு வரவேண்டும் .

சாத்தூர் தொகுதி மட்டுமல்ல தமிழகம் முழுவதுமே தேசிய ஜனநாயக கூட்டணிக்கு பிரகாசமாக வெற்றி வாய்ப்புள்ளது.

எல்லா மக்களும் ஆரவாரத்துடன் மகிழ்ச்சியாக வாக்களித்து வருகிறார்கள், மிகப்பெரிய எழுச்சி கிடைத்துள்ளது.

விஜய்யால் தாக்கத்தை ஏற்படுத்த முடியாது அனைத்து தொகுதிகளிலும் வாக்குகளைப் பிரிப்பார். தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைக்கும் எடப்பாடி பழனிசாமி முதல்வர் ஆவார்" என தெரிவித்தார்

# "தமிழகத்தில் 210 தொகுதிகளில் அதிமுக வெற்றி பெறும்"

## முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி



**கோவை, ஏப்.24:**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 210 தொகுதிகளில் வெல்வோம் என்று முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி இன்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் காலை 7 மணி முதல் விறுவிறுப்பாக நடைபெற்று வரும் நிலையில், கோவை தொண்டாமுத்தூர் தொகுதி அதிமுக வேட்பாளரும், முன்னாள் அமைச்சருமான எஸ். பி.வேலுமணி தனது தொகுதிக்கு உட்பட்ட சுகுணாபுரம் அரசுப் பள்ளியில் குடும்பத்தினருடன் வந்து வாக்கு செலுத்தினார்.

அதைத் தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில், "இந்த தேர்தலில் தமிழகம் முழுவதும் அதிமுக கூட்டணி 210 இடங்களில் வெல்லும். கோவை மாவட்டத்தில் உள்ள 10 தொகுதிகள் மற்றும் அவிநாசி தொகுதியையும் சேர்த்து 11 தொகுதிகளில் நாங்கள் வெற்றி பெறுவோம். தமிழகத்தில் ஆட்சி மாற்றம் உறுதியாகி உள்ளது. நீலகிரி, திருப்பூர், கோவையில் அனைத்து தொகுதிகளிலும் வெல்வோம்.

அதிமுகபொதுச்செயலாளர் பழனிசாமி தலைமையில் மீண்டும் நல்லாட்சி அமையும். மக்கள் அதிமுக ஆட்சிக்கு வர வேண்டும் என்று ஆர்வத்துடன் வாக்களிக்கின்றனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

# தடுப்பில் மோதி விபத்து



சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் உளுந்தூர்பேட்டை அருகே பாதூர் என்ற இடத்தில் சரக்கு லாரி, சாலைத் தடுப்பில் மோதி விபத்துகுள்ளானது. இதனால், சுமார் 2 கி.மீ தூரத்திற்கு போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

# திருவள்ளூர் ஸ்ரீவைத்திய வீரராகவர் கோயிலில் கொடியேற்றத்துடன் சித்திரை பிரமோற்சவ விழா ஆரம்பம்



**சென்னை, ஏப்.24:**

திருவள்ளூரில் ஸ்ரீவைத்திய வீரராகவர் கோயில் சித்திரை பிரமோற்சவ விழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்ப மானது. திருவிழாவின் முக்கிய நிகழ்வுகளாக வரும் 28ம் தேதி தேரோட்டமும், 30ம் தேதி தீர்த்த வாரியும் நடைபெற உள்ளது. திருவள்ளூரில் 108 திவ்ய தேசங்களில் ஒன்றானஸ்ரீவைத்திய வீரராகவ பெருமாள் கோயில் அமைந்துள்ளது.

இக்கோயிலில் சித்திரை பிரமோற்சவ விழா நேற்று முன்தினம் தொடங்கியது. இவ்விழா, மே மாதம் 1ம் தேதி வரை நடைபெறுகிறது. அதன்படி நேற்று முன்தினம் காலை 4.15 மணியளவில் த்வஜாரோஹனம் கொடியேற்றத்துடன் தொடங்கியது. 5.30 மணியளவில் தங்க சப்பரம் புறப்பாடும், 11 மணிக்கு திருமஞ்சனமும் நடந்தது.

இரவு 7 மணி அளவில் சிம்ம வாகனத்தில் வீரராகவர் ஸ்ரீதேவி, பூதேவியுடன் வீதி புறப்பாடு நடைபெற்றது.

நேற்று (23ம் தேதி) காலை 5 மணியளவில் ஹம்ச வாகனத்தில் வீதி புறப்பாடும், 9:30 மணியளவில் திருமஞ்சனமும், இரவு 7 மணிக்கு சூரிய பிரபை புறப்பாடும், நாளை (24ம் தேதி) காலை 4 மணியளவில் கருட சேவை (கோபுர தரிசனம்), 6 மணியளவில் வீதி புறப்பாடும், மாலை 3 மணியளவில் திருமஞ்சனமும், இரவு 7.30 மணியளவில் அனுமந்த வாகனத்தில் வீதி புறப்பாடும் நடைபெறுகிறது.

அதேபோல், 25ம் தேதி (சனிக்கிழமை) காலை 5 மணியளவில் சேஷ வாகனத்தில் புறப்பாடும், 10 மணியளவில் திருமஞ்சனமும், இரவு 7 மணியளவில் சந்திர பிரபையும், 26ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 4 மணியளவில் நாச்சியார் திருக்கோலமும், 10.30 மணியளவில் திருமஞ்சனமும், இரவு 7 மணியளவில் யாளி வாகனத்தில் வீதி புறப்பாடும் நடைபெறுகிறது.

மேலும், 27ம் தேதி (திங்கட்கிழமை) காலை 5 மணியளவில் வேணுகோபாலன் திருக்கோலம் சூர்ணாபிஷேகமும், 6 மணியளவில் வெள்ளி சப்பரமும், 10.30 மணியளவில் திருமஞ்சனமும், இரவு 7 மணிக்கு யானை வாகனமும், 28ம் தேதி (செவ்வாய்க்கிழமை) காலை 5.15 மணியளவில் தேருக்கு எழுந்தருளுதலும், 7:30 மணியளவில் தேர் புறப்பாடும், இரவு 6.30 மணியளவில் தேரிலிருந்து எழுந்தருளி திருமஞ்சனமும், இரவு 9:30 மணியளவில் கோவிலுக்கு எழுந்தருளும் நடைபெறுகிறது.

29ம் தேதி (புதன்கிழமை) காலை 9.30 மணியளவில் திருமஞ்சனமும், மாலை 3 மணியளவில் திருப்பாதம் சாடி திருமஞ்சனமும், இரவு ஏழு 7.30 மணியளவில் குதிரை வாகனமும், 30ம் தேதி (வியாழக்கிழமை) காலை 4 மணியளவில் ஆள் மேல் பல்லக்கும், 10.30 மணியளவில் தீர்த்தவாரியும், இரவு 7.30 மணியளவில் விஜயகோடி விமானமும் நடைபெறுகிறது.

வரும் மே மாதம் 1ம் தேதி (வெள்ளிக்கிழமை) காலை 9 மணியளவில் திருமஞ்சனமும், 10.30 மணியளவில் துவாதச ஆராதனையும், இரவு 9 மணியளவில் கண்ணாடி பல்லக்கும், 11.30 மணியளவில் த்வஜ அவரோகணமும் நடைபெறுகிறது. இந்த பிரமோற்சவத்திற்கான ஏற்பாடுகளை கோயில் கவுரவ ஏஜென்ட் ஸ்ரீரங்கநாதன் மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர்கள், கோயில் அலுவலர்கள், பணியாளர்கள் செய்துள்ளனர்.

# "ஆட்சி மாற்றம் தேவை என்பதில் மக்கள் உறுதியாக இருக்கிறார்கள்"

## வானதி சீனிவாசன்




**கோவை, ஏப்.24:**

"ஆட்சி மாற்றம் தேவை என்பதில் மக்கள் உறுதியாக இருக்கின்றனர்" என வானதி சீனிவாசன் தெரிவித்தார்.

கோவை, சிவானந்தா காலனி, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலையில் உள்ள காமராஜர் பள்ளியில் பாஜக தேசிய மகளிர் அணி தலைவரும், கோவை வடக்கு தொகுதி வேட்பாளருமான வானதி சீனிவாசன் வாக்களித்தார்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் வானதி சீனிவாசன் பேசுகையில், "2026 சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப் பதிவு விறுவிறுப்பாக நடைபெறுகின்றது. பெண்களும், இளைஞர்களும் அதிகளவு வாக்களித்து வருகின்றனர். தேர்தல் பரபரப்புக்கு மத்தியிலும் திமுக இன்று காலை வரை தங்க நாணயம், வெள்ளி நாணயம் என டிராமா செய்கிறார்.

ஆட்சி மாற்றம் தேவை என்பதில் மக்கள் உறுதியாக இருக்கின்றனர். வாக்குறுதிகளை நிறைவேற்ற கோரி 6 மாத காலமாக போராடிக்கொண்டு இருப்பவர்களுக்கு விரைவில் தீர்வு கிடைக்கும்.

கோவை தெற்கு தொகுதியில் தேர்தல் ஆணையம் கண்ணில் மண்ணை தூவி அராஜாகம் நடந்து கொண்டு இருக்கின்றது. தூங்கிக் கொண்டு இருப்பவர்களை எழுப்பி கோல்ட் காயின், சில்வர் காயின் என ஏமாற்றி வருகின்றனர்.

கோவை மாநகராட்சியில் இதே மாதிரி டிராமா செய்தார்கள். இப்போது குப்பை கூட எடுக்க வருவதில்லை. ஆட்சி மாற்றம் நிச்சயமாக வேண்டும். மக்கள் இதை செய்வார்கள்.

இளைஞர் சக்தியால் எதுவும் முடியும். இன்ஸ்ட்டா, சமூக ஊடகத்தில் இருப்பது அல்ல அரசியல். 2 மணி நேர சினிமா என்பது வேறு; அரசியல் வேறு.

இன்ஸ்டா என்பது ஒரு டூல். முடிவெடுப்பதில் புத்திசாலித்தனம் வேண்டும். நிறைய இடங்களில் வாக்குப் பதிவு இயந்திரம் பழுதடைந்துள்ளது" என்று அவர் கூறினார்.

# "ஓட்டுரிமை உள்ள அனைவரும் வாக்களிக்க வேண்டும்"

## நடிகர் ரஜினிகாந்த்



**சென்னை, ஏப்.24:**

சென்னை - ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியில் அமைந்துள்ள வாக்குச்சாவடியில் நடிகர் ரஜினிகாந்த் தனது வாக்கினை செலுத்தினார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் இன்று காலை 7 மணிக்கு தொடங்கியது. இதில் மொத்தம் 5.73 கோடி பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். இந்த சூழலில் சினிமா, அரசியல் என பல்வேறு துறை சார்ந்த பிரபலங்கள் தங்களது ஜனநாயக கடமையை ஆற்றி வருகின்றனர். அந்த வகையில் நடிகர் ரஜினிகாந்த் தனது வாக்கினை செலுத்தினார்.

ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியில் உள்ள வாக்குச்சாவடி எண் 237-ல் தனது வாக்கினை ரஜினிகாந்த் செலுத்தினார். அதன் பின்னர் வாக்கு செலுத்தியதற்கு அடையாளமாக தனது விரலில் வைக்கப்பட்ட அடையாள மையை அவர் உயர்த்தி காட்டினார். தனது மகள் சவுந்தர்யா உடன் அவர் வாக்களிக்க வந்திருந்தார்.

"ஓட்டுரிமை உள்ள எல்லோரும் கண்டிப்பாக ஓட்டு போட வேண்டும்" என செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் ரஜினிகாந்த் கூறியிருந்தார்.

# வாக்களித்தே தீருவேன் - தேர்தல் அலுவலரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்ட பெண் வாக்காளர்



**சென்னை, ஏப்.24:**

தமிழக சட்டசபை தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று காலை தொடங்கியது. 234 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறுகிறது. இந்த தேர்தலில் தி.மு.க. கூட்டணி, அ.தி.மு.க. கூட்டணி, நாம் தமிழர் கட்சி மற்றும் தமிழக வெற்றிக் கழகம் கட்சி என நான்கு முனை போட்டி நிலவுகிறது.

தமிழகத்தில் உள்ள 234 தொகுதிகளிலும் காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. வாக்குப்பதிவு தொடங்கியது முதல் வரிசையில் நின்று மக்கள் ஆர்வமாக தங்கள் ஜனநாயக கடமையாற்றி வருகின்றனர்.இந்நிலையில் சென்னை மதுரவாயல் சட்டசபை தொகுதிக்குட்பட்ட காரம்பாக்கம் பகுதியில் பெண் வாக்காளர் உமாமகேஸ்வரி வாக்களிக்க சென்றார். அப்போது, உமாமகேஸ்வரி என்ற பெயரில் ஏற்கனவே வாக்கு செலுத்தப்பட்டதாக கூறிய தேர்தல் அதிகாரிகள், அவரை அனுமதிக்க மறுத்தனர். இதைக்கேட்ட உமாமகேஸ்வரி அதிர்ச்சி அடைந்தார்.

வாக்களித்தே தீருவேன் என பெண் வாக்காளர் தேர்தல் அலுவலரிடம் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

# "தேர்தல் ஆணைய நடவடிக்கைகள் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது" – அமைச்சர் சிவசங்கர்



**அரியலூர், ஏப்.24:**

தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கைகள் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தமிழகம் முழுவதும் சட்டப்பேரவைத் தேர்தல் நேற்று நடந்தது. அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் ஒன்றியத்துக்கு உட்பட்ட தேவனூர் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தனது குடும்பத்துடன் வருகை தந்து வரிசையில் நின்று, தனது வாக்கினை செலுத்தினார்.

தொடர்ந்து செய்தியாளர் களிடம் அவர் கூறியது: தமிழக முதல்வர் ஸ்டாலின் திட்டங்களால் தமிழகத்தில் ஸ்டாலின் அலை வீசுகிறது. மிகப்பெரிய வெற்றியை திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி பெற இருக்கிறது. இந்த கூட்டணியின் பலத்தினால், சிறப்பான வெற்றி இந்த தேர்தலில் பிரதிபலிக்கிறது. தமிழகம் திமுக 2.0 ஆட்சி காண இருக்கிறது.

தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் பல இடங்களில் சந்தேகத்தை எழுப்புகிறது. இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரின் நடவடிக்கைகள் எல்லா சந்தேகங்களுக்கும் மூல காரணமாக விளங்குகிறது. தமிழ்நாட்டில் முக்கிய அதிகாரிகளை எந்த தேவையும் இன்றி மாற்றி உள்ளது.

குறிப்பாக கடைசி இரண்டு நாட்களில் மாற்றுவது எல்லோரிடமும் ஒரு பயத்தை உண்டாக்குவதற்கான நடவடிக்கையாகதோன்றுகிறது. குழுவின் மூலமாகதேர்ந்தெடுக்க வேண்டிய இந்திய தேர்தல் ஆணையர், பிரதமர் மோடியின் மூலமாக தேர்வு செய்யப்பட்டுள்ளார். அவரது நடவடிக்கைகள் தமிழகத்தில் அதனை உறுதி செய்கிறது.

தமிழகத்தில் அதிமுக வேட்பாளர்கள் சார்ந்த இடங்களில் இருந்து பணம் எடுக்கப்பட்டுள்ளது. பல்வேறு கட்சியினரின் இடங்களில் இருந்து பணம் எடுக்கப்பட்டுள்ளது. அதிமுக இதற்கு காரணம் என்று ஊடக மூலம் தெரிய வருகிறது. குன்னம் தொகுதியில் டோக்கன் என்ற பெயரில் நோட்டீஸ் கொடுத்து வருகின்றனர். அதனை நம்பி மக்கள் வாக்களிப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றனர்.

இவர்களைப் போன்றவர்களை எல்லாம் பார்த்தவர்கள் தான் தமிழக மக்கள். இவர்கள் ஏமாற்று வேலைக்கு யாரும் பலியாக மாட்டார்கள். அவர்கள் நடத்துகின்ற நிறுவனங்களில் எப்படி நடந்து கொள்கின்றனர் என்பதை நம்முடைய மக்கள் அறிவார்கள்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# ஜனநாயகக் கடமை ஆற்றிய திரைப் பிரபலங்கள்



ரஜினி முதல் அஜித் வரை - ஜனநாயகக் கடமை ஆற்றிய திரைப் பிரபலங்கள்

# "யார் ஆட்சிக்கு வந்தாலும்..." – வாக்களித்த பின் நடிகர் சிவக்குமார் வைத்த கோரிக்கை




**சென்னை, ஏப்.24:**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தனது வாக்கினை செலுத்திய பின் நடிகர் சிவக்குமார் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது யார் ஆட்சிக்கு வந்தாலும் இதை செய்ய வேண்டுமென அவர் கோரிக்கை ஒன்றை வைத்தார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் இன்று காலை 7 மணிக்கு தொடங்கியது. இதில் மொத்தம் 5.73 கோடி பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். காலை 9 மணி நிலவரப்படி சுமார் 17.69 சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளன. இந்த சூழலில் சினிமா, அரசியல் என பல்வேறு துறை சார்ந்த பிரபலங்கள் தங்களது ஜனநாயக கடமையை ஆற்றி வருகின்றனர். அந்த வகையில் நடிகர் சிவக்குமார் சென்னையில் தனது வாக்கினை செலுத்தினார்.

"என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால் யார் ஆட்சிக்கு வந்தாலும் டாஸ்மாக் மதுபானக் கடைகளை உடனடியாக மூட வேண்டும். குடிமக்களை குடிகார மக்களாக ஆக்கியது போதும்.

கோடி கோடியாக சொத்துகளை குவிக்காமல் கடைக்கோடி மக்களின் வாழ்வில் ஒளியேற்ற வேண்டும். நான் வைக்கும் இந்த கருத்தை பல ஆண்டுகளாக சொல்லி வருகிறது. இதை செய்வார்களா என்று தெரியாது. ஆனால், செய்தால் சந்தோஷம். கிட்டத்தட்ட 40 சதவீத மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்" என சிவக்குமார் தெரிவித்தார்.

# வாக்களிப்பதை செல்போனில் வீடியோ எடுத்து சமூக வலைதளங்களில் ரீல்ஸ் ஆக வெளியிட்டவர் கைது





**திருப்பத்தூர், ஏப்.24:**

திருப்பத்தூர் தொகுதியில் விசில் சின்னத்திற்கு வாக்களிப்பதை செல்போனில் வீடியோ எடுத்து சமூக வலைதளங்களில் ரீல்ஸ் ஆக வெளியிட்ட தவெகவைச் சேர்ந்த சக்திவேல் என்பவர் கைது செய்யப்பட்டார். தேர்தல் ஆணையம் எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில், வாக்குச்சாவடிக்குள் அவர் வீடியோ எடுப்பதை சிசிடிவி மூலம் அதிகாரிகள் உறுதி செய்ததை அடுத்து கைது நடவடிக்கை எடுத்தனர்.

# கவிதை அரங்கம்!






சண்டைகள் வந்தாலும்
சமாதானம் உன்
முத்தத்தில்தான் முடிகிறது.

என் மௌனத்திற்குப்
பின்னால் இருக்கும்
ஆயிரக்கணக்கான
கதைகளை உன்னால்
மட்டுமே படிக்க முடியும்.

உன்னைப் பார்த்த நாள்
முதல், எனக்குள்ளேயே
நான் தொலைந்து
போனேன்.

நிலவுக்குக் கறை
இருக்கலாம், ஆனால்
என் காதலுக்குக் கறை
இல்லை.

# வாழ்க்கை தத்துவம்...



அகந்தை இருக்கும் இடத்தில் அறிவு மங்கிவிடும்.

முயற்சி மற்றும் வெற்றி
முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்.

தோல்வி என்பது வெற்றிக்கான முதல் படிக்கட்டு.

இலக்கை நோக்கி ஓடிக்கொண்டே இரு; தடைகள் தானாக விலகும்.

கடின உழைப்புக்கு ஈடு இணை எதுவுமில்லை.

காலம் உனக்காகக் காத்திருக்காது; நீ காலத்தைப் பயன்படுத்திக் கொள்.

# அவள் அப்படியொன்றும் அழகில்லை

ஒரே புள்ளன்னு இருபத்தி மூனு வயசிலையே ராஜாவுக்கு பொண்ணுப்பார்க்க ஆரமித்தார்கள், இப்போ முப்பத்தி மூனு வயசாகுது இன்னுமும் பொண்ணு கிடைத்தப்பாடில்லை, சில பொண்ணுகளை அவனுக்கு பிடிக்கவில்லை, சில பொண்ணுகளுக்கு மாப்பிள்ளையை பிடிக்கவில்லை, இது இரண்டுமே கூடி வந்தால் ராஜாவின் அம்மாவுக்கு அந்த சம்மந்தம் ஒத்து வருவதில்லை, அதுக்கு காரணம் பெரிசா ஒன்னுமில்ல, இவங்க வரதட்சணை வாங்க காய்கறி எடைப்போடும் தராசை கொண்டுப்போனால் பரவாயில்லை, கண்டைணர் வெயிட்போடும் வே பிரிட்ஜை அல்லவா சுமந்துச் செல்கிறார்கள் , அதனால்தான் இன்னும் ராஜா கன்னி கழியாமல் காலவதியான ஆம்பளையா சுத்திக்கிட்டு இருக்கிறான், இந்த சமயத்துலதான் பக்கத்து ஊர்ல ஒரு பால்வாடி டீச்சருக்கு மாப்பிள்ளை தேடுவதாகவும், அந்த டீச்சருக்கும் முப்பது வயசுக்கு மேல் இருப்பதாகவும் தகவல் வர, விரைந்து சென்றார்கள் ராஜா அம்மாவும் அப்பாவும், கூடவே நானும் வரேன்னு ராஜாவும் தொற்றிக்கொண்டான்,

அந்த ஊர்ல போய் பால்வாடியை கண்டுப்பிடித்து, அந்த பொண்ணைப் பார்த்தார்கள், வயது முப்பத்தி ஒன்னுதான் என்றாலும் இருபத்தி ஐந்துதான் மதிக்கக்கூடியதாக இருந்தாள், ஆசிரியைக்கே உரிய மென்மையாக பேசியவள், பக்கத்தில்தான் வீடு இருப்பதாகவும், அங்கே சென்றாள் தனது பெற்றோரை சந்திக்கலாமென்றும் கூறி, கூடவே சத்துணவு செய்யும் ஆயா அம்மாவை வீட்டை காட்டும்படி அனுப்பி வைத்தாள்,

அங்கேச்சென்று பொண்ணுப் பார்க்க வந்த செய்தியை சொன்னதும் அவர்கள் ரொம்பவும் சந்தோசப்பட்டு உட்காரச் சொன்னார்கள், இரண்டு குடும்பமும் பல விசயங்களை பேசினார்கள், பொண்ணு தருவதாகவும் ஒப்புக்கொண்டார்கள், இந்த அரிய செய்தியை கேட்டவுடன் ராஜாவின் பெற்றோருக்கு வயிற்றில் கூலிங் மோர் குடித்ததுப்போல குளிர்ந்துப் போனார்கள், முறைப்படி பொண்ணுப் பார்க்க புதன்கிழமை சொந்தப் பந்தங்களை அழைத்து வருவதாகவும் தெரிவித்துவிட்டு புறப்பட்டார்கள்,

வரும் வழியில்தான் ராஜாவின் அப்பா, ராஜாவை கேட்டார்

"என்னடா பொண்ணு புடிச்சிருக்கா,,,?

"புடிக்கலப்பா"

"ஏன்டா அந்தப்பொண்ணுக்கு என்ன,,, கழுதை வயசாகுது உனக்கு, இதையும் விட்டா நீ தனிக்கட்டையாதான் வாழணும்,ஞாபகம் வச்சிக்கோ"

"இல்லப்பா பொண்ணு கறுப்பா இருக்கு, அதுவும் பால்வாடி டீச்சரு, எனக்கு சுத்தமா புடிக்கல"

"அடே லூஸு பயலே, கறுப்பா இருந்தாயென்ன, சிவப்பா இருந்தாயென்ன, கலருல என்ன இருக்கு, அதுவும் பொண்ணுதானேடா, அதுவும் அரசாங்க வேலைடா, பால்வாடி டீச்சருன்னா சும்மாவா, குழ்நதைகளை மேய்ப்பது, மாடு மேய்பதைவிட கஷ்டமான வேலைடா, அந்தப் பொண்ணுக்குதான் பொறுமை அதிகமா இருக்கும்,நம்ம குடும்பத்திற்கு பொருத்தமாக இருக்கும், எழுத்தறிவித்தவன் இறைவன்னு சொல்லுவாங்களே அது பால்வாடி டீச்சருக்குதான் பொருத்தமான சொல்லு தெரியுமா,,? குழந்தைகளை முதன் முதலா அவங்களை நம்பிதான் கொண்டி விடுகிறோம், அவங்கதான் பாடல் சொல்லியும், கதை சொல்லியும், மணலை தரையில் பரப்பி குழந்தைகளை கைவிரலைப்பிடித்தி அரிச்சுவடி எழுதப் பழக்குறாங்க, அந்த மாதரி புனிதமான வேலைசெய்யும் பொண்ணு உனக்கு வாய்த்திருப்பது அதிஷ்டம், அதனால் இந்தப் பொண்ணுதான் உனக்கு லாயக்கு, இதை கட்டலன்னா நீ பிரம்மச்சாரியா போக வேண்டியதுதான், சொல்லிட்டேன்,

"எதுக்கு அப்பனும் மகனும் சண்டை போடுறீங்க, விடுங்க நான் பக்குவமா சொல்றேன்"னு இடையில் புகுந்தால் ராஜாவின் அம்மா தனம்,

"உனக்கும் தாண்டி சொல்றேன், அந்தக் குடும்பத்தில போயி பழைய மாதரி வரதட்சணைக் கேட்டு அடம் பிடிக்காதே, அவங்களுக்கு எது முடியுமோ, அதை செய்யட்டும், புரியுதா,"

"பட்டதெல்லாம் போதும் சாமி, இனிமேல் கேட்கவே மாட்டேன், இவனுக்கு ஒரு துணை கிடைச்சா போதும்"

"சொல்லுடா" வென்று மறுப்படியும் ராஜா பக்கமே திரும்பினார், அவனது அப்பா,

"நீங்க சொன்னதெல்லாம் யோசித்து பார்த்தேன் அப்பா, அவள் அப்படி ஒன்றும் அழகில்லைதான், ஆனா,,, அவளுக்கு இணை யாருமில்லை என்பதை புரிஞ்சிக்கிட்டேன் அப்பா"

"எப்படிடா இப்படி"

"ஆமாப்பா, மாதா,பிதா,குரு,தெய்வமுன்னு சொல்வாங்களே, இத்தனை வயசு வரைக்கும் மாதா,பிதாவாகிய நீங்க ரெண்டுப் பேரும் என்னை கவனிச்சீங்க, உங்களுக்குப் பிறகு அந்த குருவே என்னை கவனிக்கப்போகுது, இதைவிட பாக்கியம் எனக்கு வேறென்ன வேண்டிக்கிடக்கு, எனக்கு சம்மதப்பா, ஆனா ஒரு கண்டிசன் அம்மா"


"என்னடா சொல்லு"

"முன்னாடியெல்லாம் பொண்ணுங்க வீட்டுக்கு வே பிரிட்ஜை தூக்கிக்கிட்டு போனமாதரி, என் பொண்டாட்டி வீட்டுக்கும் தூக்கிட்டு வராதீங்க சொல்லிட்டேன், அவ பாவம்மா"

ஓ,,, அதுக்குள்ள பொண்டாட்டியா ஆகிட்டாளாயென கேட்டப்படி மூவரும் சத்தமாக சிரித்தப்படி சாலை ஓரத்திலுள்ள கரும்பு ஜூஸ் கடையில் மூனு ஜூஸ் வாங்கி குடித்தார்கள், இனிப்பும் சுவையும் அதிகமாகவே இருப்பதாக பேசிக்கொண்டே.

**நாகை ஆசைத்தம்பி**
கோவை

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



நோயாளி: டாக்டர், எனக்கு ஒரு விசித்திரமான வியாதி.. யாராவது பேசினா எனக்கே கேக்க மாட்டேங்குது!

டாக்டர்: அது வியாதி இல்லப்பா.. அதுக்கு பேரு தான் 'கவனம்'! முதல்ல ஹெட்போனை கழட்டிட்டு பேசுங்க.



# தினம் ஒரு சமையல்




## மணத்தக்காளி வத்தக்குழம்பு

தேவையான பொருட்கள்:

மணத்தக்காளி வத்தல், புளி (எலுமிச்சை அளவு), சின்ன வெங்காயம், பூண்டு, குழம்பு மிளகாய்த்தூள், நல்லெண்ணெய்.

செய்முறை:

நல்லெண்ணெயில் மணத்தக்காளி வத்தலை வறுத்து தனியாக எடுக்கவும்.



அதே எண்ணெயில் கடுகு, வெந்தயம், கறிவேப்பிலை தாளித்து, பூண்டு மற்றும் சின்ன வெங்காயம் சேர்த்து வதக்கவும்.

புளிக்கரைசல் மற்றும் மிளகாய்த்தூள் சேர்த்து கொதிக்கவிடவும்.

குழம்பு சுண்டி எண்ணெய் பிரிந்து வரும்போது, வறுத்த வத்தலைச் சேர்த்து இறக்கவும்.

# ஆலமரம் பயன்கள்



ஆலமரம் நம் பண்பாட்டிலும், இயற்கையிலும் மிக முக்கியமான இடத்தைப் பிடித்துள்ளது. "ஆலும் வேலும் பல்லுக்குறுதி" என்ற பழமொழிக்கு ஏற்ப, இதன் மருத்துவப் பயன்கள் ஏராளம். ஆலமரத்தின் பல்வேறு பாகங்கள் தரும் பயன்கள் இதோ:

மருத்துவப் பயன்கள்

பற்களின் ஆரோக்கியம்: ஆலமரத்தின் இளம் விழுதுகள் மற்றும் குச்சிகளைக் கொண்டு பல் துலக்குவது பற்களை உறுதியாக்கும். இது ஈறுகளில் ஏற்படும் வீக்கம் மற்றும் ரத்தக் கசிவைத் தடுக்கும் ஆற்றல் கொண்டது.

ஆலம்பால் பயன்கள்: கால்களில் ஏற்படும் பித்தவெடிப்பு, மூட்டு வலி மற்றும் உடலில் ஏற்படும் கட்டிகள் மீது ஆலம்பாலைத் தடவி வர நல்ல நிவாரணம் கிடைக்கும்.

சர்க்கரை நோய்: ஆலமரத்தின் பட்டையை இடித்து நீர் விட்டு காய்ச்சி 'கஷாயம்' போல குடித்து வந்தால், ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்த உதவும்.

செரிமானப் பிரச்சனைகள்: இதன் மொட்டுகள் மற்றும் இலைகள் வயிற்றுப்போக்கு மற்றும் சீதபேதி போன்ற பிரச்சனைகளை குணப்படுத்தப் பயன்படுகின்றன.

சுற்றுச்சூழல் பயன்கள்

பிராணவாயு (OXYGEN): ஆலமரம் அதிகப்படியான ஆக்சிஜனை வெளியிடும் மரங்களில் ஒன்று. இது காற்றைச் சுத்திகரிப்பதில் பெரும்பங்கு வகிக்கிறது.

பல்லுயிர் பெருக்கம்: இது பறவைகள், அணில்கள், குரங்குகள் மற்றும் பல பூச்சிகளுக்குப் புகலிடமாகத் திகழ்கிறது. இதன் பழங்கள் பல பறவைகளுக்கு முக்கிய உணவாகும்.

நிழல் மற்றும் குளிர்ச்சி: பரந்து விரிந்து வளரும் இதன் கிளைகள் கோடை காலங்களில் அடர்த்தியான நிழலைத் தருவதோடு, சுற்றியுள்ள பகுதியைக் குளிர்ச்சியாக வைத்திருக்க உதவுகிறது.

பிற பயன்கள்

மண் அரிப்பு தடுப்பு: ஆலமரத்தின் விழுதுகள் மண்ணிற்குள் ஊன்றிச் செல்வதால், அது மண்ணை இறுக்கமாகப் பிடித்துக் கொள்கிறது. இது பலத்த காற்று மற்றும் மழையின் போது மண் அரிப்பைத் தடுக்கிறது.

ஆன்மீகம் மற்றும் கலாச்சாரம்: தமிழர்களின் வாழ்வியலில் ஊர் மந்தைகளில் ஆலமரம் ஒரு பொதுவான சந்திப்பு இடமாகவும், வழிபாட்டுத் தலமாகவும் மதிக்கப்படுகிறது.

குறிப்பு: ஆலமரத்தின் பாகங்களை மருத்துவத்திற்காகப் பயன்படுத்தும் போது, முறையான சித்த மருத்துவர் அல்லது நிபுணரின் ஆலோசனையைப் பெறுவது சிறந்தது.

ஆலமரம் பற்றி வேறு ஏதேனும் குறிப்பிட்ட தகவல்கள் (உதாரணமாக: அதன் தாவரவியல் பண்புகள் அல்லது நடும் முறை) தேவைப்படுகிறதா?

# செம க்யூட்டா சிரிச்ச முகத்துடன் வாக்களித்த நடிகை த்ரிஷா.. இணையத்தில் வைரல் வீடியோ

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 2026 ஏப்ரல் 23 அன்று காலை 7 மணி முதல் 234 தொகுதிகளிலும் ஒரே கட்டமாக நடைபெற்று வருகிறது. மாலை 6 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறும் நிலையில், 5.73 கோடிக்கும் அதிகமான வாக்காளர்கள் தங்கள் வாக்குரிமையை செலுத்த தகுதி பெற்றுள்ளனர். மொத்தம் 4,023 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இந்த நிலையில், நடிகை த்ரிஷா கிருஷ்ணன் தன் தாயுடன் சென்னை அல்வார்பேட் வாக்குச்சாவடியில் வாக்களித்தார். காலையிலேயே வந்து வாக்களித்த முதல் பிரபலங்களில் அவரும் ஒருவராக திகழ்ந்தார்.

மேலும் அவர் பச்சை நிற சுடிதார் அணிந்து செம சிம்பிளாக சிரித்துக் கொண்டே அவர் வாக்குச்சாவடியில் தனது வாக்கினை செலுத்தி விட்டு வெளியே வரும் வீடியோ ஒன்று வெளியாகி வைரலாகி வருகிறது.

ஏற்கனவே, நடிகர்களான விஜய், ரஜினிகாந்த், கமல்ஹாசன், அஜித்குமார், விக்ரம், எஸ்.கே, சிபி, சிம்பு, தனுஷ், துருவ் ஆகியோரும் தங்கள் வாக்குகளை செலுத்தினர்.

மேலும் நடிகரும் அரசியல்வாதியுமான விஜய், தன் கட்சியான தமிழக வெற்றி கழகத்தை முதல் முறையாக தேர்தலில் களமிறக்கியுள்ளார். அவர் பெரம்பூர் மற்றும் திருச்சிராப்பள்ளி கிழக்கு தொகுதிகளில் போட்டியிடுகிறார். இந்த கட்சி 234 தொகுதிகளிலும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது.

அத்துடன், வாக்கு எண்ணிக்கை மே 4ஆம் தேதி நடைபெறும். தற்போதைய சட்டமன்ற பதவிக்காலம் மே 10ஆம் தேதி முடிவடைகிறது. இந்தத் தேர்தல் முடிவுகள் தமிழகத்தின் அடுத்த அரசை நிர்ணயிக்கும் என்பதால் மிகுந்த எதிர்பார்ப்புடன் காணப்படுகிறது.






காஷ்மிரா அதிகம் கிளாமர் ஆன லுக்கில் ஹாட் போஸ் கொடுத்து இருக்கும் லேட்டஸ்ட் போட்டோஷூட் ஸ்டில்களை பாருங்க.

# அடுத்தடுத்து மாஸான இயக்குநர்களுடன் கைகோர்க்கும் கவின்.! வெளியானது புதிய அப்டேட்

தமிழ் சினிமாவில் வளர்ந்து வரும் இளம் நடிகராக திகழும் கவின் குறித்து புதிய தகவல்கள் வெளியாகி ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளன. தற்போது, கவின் நடிக்க உள்ள புதிய படத்தை அறிமுக இயக்குநர் பரவீன் பரமசிவம் இயக்க உள்ளதாக கூறப்படுகிறது. இந்த தகவல் திரைப்பட வட்டாரங்களில் பேசுபொருளாக மாறியுள்ளது.

இதேவேளை, கவின் தற்போது நயன்தாரா உடன் 'ஹாய்' என்ற படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்தில் லேடி சூப்பர் ஸ்டார் நயன்தாராவும் கவினும் முதன்மை கதாபாத்திரங்களில் இணைந்துள்ளதால் ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

இப்படத்தை விஷ்ணு எடவன் இயக்கி வருகிறார். இவர், பிரபல இயக்குநர் லோகேஷ் கனகராஜ் அவர்களிடம் உதவி இயக்குநராக பணியாற்றிய அனுபவம் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.



மேலும், இப்படத்திற்கு ஜென் மார்ட்டின் இசையமைத்து வருகிறார். இப்படத்தின் அப்டேட்கள் ரசிகர்களிடம் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி வருகிறது.

# அனுமனுக்கு சாத்தப்படும் வெற்றிலை மாலையின் அற்புத சக்தி : இதன் ரகசியம் தெரியுமா?

பக்தி என்றால் பல வழிகள் இருக்கலாம்... ஆனால் சில வழிபாடுகள் — நேரடியாக பலனை தரும்!
அப்படிப்பட்ட அதிசயமான ஒரு வழிபாடு தான் ஆஞ்சனேயருக்கு வெற்றிலை மாலை சாத்துவது.

★ இது ஒரு சாதாரண பூஜை அல்ல...
★ இது சீதையின் ஆசீர்வாதத்தை நினைவூட்டும் ஒரு தெய்வீக வழிபாடு!
★வெற்றிலை மாலையின் தோற்றம் — ஒரு புனிதக் கதை
இலங்கையின் அசோக வனத்தில் சிறைப்பட்டிருந்த சீதாதேவியை தேடி அனுமன் புறப்பட்டார்.
அவன் பயணம் எளிதானது அல்ல...

★கடல் கடந்து சென்றான்
★அசுரர்களை வென்றான்
★ பல தடைகளை தாண்டி இறுதியில் சீதையை கண்டான்



அந்த தருணம் — ஒரு பக்தனின் வெற்றி! ஒரு தூதனின் கடமை நிறைவு!
அப்போது, ஸ்ரீராமர் கொடுத்த மோதிரத்தை அனுமன் சீதையிடம் கொடுத்தான்.

அதைப் பார்த்த சீதாதேவி:
★ பேரானந்தத்தில் மூழ்கினார்
★ அனுமனை ஆசீர்வதிக்க விரும்பினார்
ஆனால்...
அந்த நேரத்தில் அட்சதை இல்லை!

★உடனே அருகிலிருந்த வெற்றிலைகளைப் பறித்து
அனுமன் மீது தூவி ஆசீர்வதித்தார்

★பின்னர், அந்த வெற்றிலைகளை மாலையாக கட்டி அனுமனுக்கு அணிவித்தார்!
அந்த தருணமே — வெற்றிலை மாலை வழிபாட்டின் தொடக்கம்!
★ஏன் அனுமனுக்கே வெற்றிலை மாலை?
★இந்த மாலை — சீதையின் ஆசீர்வாதத்தின் சின்னம்
★அதனால்,
அனுமனுக்கே இது மிகச் சிறப்பு
★மற்ற தெய்வங்களுக்கு:

வெற்றிலை மாலை சாத்தக்கூடாது
தாம்பூலமாக மட்டும் சமர்ப்பிக்கலாம்
★மாலை கட்டும் விதிமுறை
வெற்றிலை மாலை கட்டும் போது:
★ஒற்றைப்படை எண்ணிக்கை மட்டுமே
★காம்பு பகுதியை நீக்க வேண்டும்
★நடுவில் பாக்கு வைத்து கட்ட வேண்டும்
★வெறும் வெற்றிலை மட்டும் கட்டக்கூடாது
★எத்தனை வெற்றிலை? — தேவைக்கு ஏற்ற பலன்
★9 வெற்றிலை
மாணவர்களுக்கு படிப்பில் கவனம், நினைவாற்றல்
★11 வெற்றிலை
குடும்ப பிரச்சனை வேலை சிக்கல் தீர
★21 வெற்றிலை
பணவரவு திருமணம், சுபகாரியம்

★108 வெற்றிலை
பெரிய பிரச்சனைகள் அனைத்து தடைகளும் நீங்க
★எந்த நாளில் சாத்தலாம்?

★ சனிக்கிழமை
★செவ்வாய்க்கிழமை
★அமாவாசை
★மூலம் நட்சத்திரம்

★தொடர்ந்து 9 வாரம் சாத்தினால்:
மிகுந்த பலன் கிடைக்கும்!

★நைவேத்யம் — சிறப்பு
★தயிர் சாதம் வைத்து நைவேத்யம் செய்தால் அனுமனுக்கு மிகவும் பிரியம்!

★கிடைக்கும் பலன்கள்
வெற்றிலை மாலை சாத்தி வேண்டினால்:
வீட்டில் மகிழ்ச்சி பெருகும்
குழந்தைகளுக்கு புத்தி கூர்மை
நினைவாற்றல் அதிகரிக்கும்
தம்பதியர் ஒற்றுமை
தொழில் வளர்ச்சி
பயம் நீங்கும்
தன்னம்பிக்கை உயரும்

★மேலும்:
நவகிரக தோஷங்கள் விலகும்
சனி பகவானின் பாதிப்பு குறையும்
★இறுதி உணர்வு
அனுமனை மனதார நம்பி
வெற்றிலை மாலை சாத்தினால்:
★ "அசாத்யம்" கூட "சாத்யம்" ஆகும்!
★ஒரு உண்மையான பக்தனின் பிரார்த்தனை எப்போதும் வெற்றியே தரும்!

தகவல்:
முனைவர்
இராம.வேதநாயகம்.

# பாஷ்யம் (எ) ஆர்யா வரலாறு

பாஷ்யம் எனும் இயற்பெயர் கொண்ட ஆர்யா (1907 - 1999) இந்திய விடுதலைப் போராட்ட வீரர். 1932-ல் இன்று சென்னை தலைமைச் செயலகம் இருக்கும் செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் உள்ள கொடிக்கம்பத்தின் உச்சியில் ஒருவரும் அறியாமல் ஏறி, பிரித்தானிய கொடியான யூனியன் ஜாக்கை இறக்கிவிட்டு, இந்திய தேசியக் கொடியை ஏற்றிய மாவீரர் பாஷ்யம் எனும் ஆர்யா. சிறந்த ஓவியர்; சிற்பி; தற்காலத்தில் புழக்கத்தில் இருக்கும் மகாகவி பாரதியாரின் படத்தினை வரைந்தவர்.

இளமையும் கல்வியும்
சென்னை மாகாணத்தின் தஞ்சாவூர் மாவட்டத்தின், மன்னார்குடி வட்டத்தில் உள்ள சேரங்குளம் கிராமத்தில் 1907-ஆம் ஆண்டில் பிறந்தார் பாஷ்யம். 'சுதேசமித்திரன்' ஆசிரியராக இருந்த தேசபக்தர் ஏ. ரங்கசாமி ஐயங்கார் இவரது உறவினர். மன்னார்குடியில் கல்வி பயின்றார். தன் 11ஆம் வயதில் பஞ்சாப் மாநிலத்தின் அமிர்தசரஸ் நகரத்தில் நடைபெற்ற ஜாலியன்வாலாபாக்கில் படுகொலையினால் ஆவேசம் கொண்டார். நீடாமங்கலம் சென்று அங்கு நடந்த காந்திஜியின் சொற்பொழிவைக் கேட்டார். அந்த இளம் வயதிலேயே தேச சேவைக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ள உறுதி பூண்டார்.

மன்னார்குடியில் உயர்நிலைப் பள்ளிப்படிப்பை முடித்தபின் திருச்சி தேசியக் கல்லூரியில் பயின்றார். அங்கு படித்த காலத்தில் இவர் பாடப்புத்தகங்களைக் காட்டிலும் தேசபக்தி நூல்களையே அதிகம் படித்தார். லாலாலஜபதிராயின் 'துரதிர்ஷ்ட இந்தியா' வீர சாவர்க்காரின் '1857- இந்திய சுதந்திரப்போர்' விவேகானந்தரின் சொற்பொழிவுகள் அரவிந்தர் வரலாறு வ. வே. சு. அய்யர் வரலாறு இந்துஸ்தான் ஜிட்டர் புரட்சியாளர் கட்சித்தலைவர் லாலா ஹர்தயாள் வரலாறு வங்காளப் புரட்சியாளர்கள் திட்டங்கள்ஆ கிய நூல்களை பாஷ்யம் தேடிப்படித்தார். இதனால் இளைஞர் பாஷ்யம், இந்திய விடுதலைக்காக ஆயுதம் ஏந்திப் போராடவும் தயாராகத் தன்னை உறுதிப்படுத்திக்கொண்டார்.

சைமன் கமிசன் போராட்டம்
இங்கிலாந்திலிருந்து 'சைமன்' என்பவர் தலைமையில் சைமன் குழு இந்தியா வந்தது. காங்கிரசார் மற்றும் இந்தியத் தொழிற்சங்க காங்கிரஸ் விடுத்த அறைகூவல்களை ஏற்று இந்தியாவெங்கும் அதனை கருப்புக்கொடி காட்டி திரும்பிப்போ என்ற முழக்கத்தோடு போராட்டங்கள் வெடித்தன. சைமன் கமிஷன் திருச்சி வந்தது. அங்கும் தேசியக் கல்லூரி மாணவர்கள் பாஷ்யம் தலைமையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதனால் கல்லூரி திரும்பிய மாணவர்களுக்கு 2 உரூபாய் அபராதமும் தலைமை தாங்கிய பாஷ்யத்திற்கு 5 உரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. பணத்தைக் கட்ட மறுத்தார் பாஷ்யம். முதல்வர் சாரநாதன் 5 ரூபாய் தானே கொடுத்து கட்டச் சொன்னதால் அபராதம் கட்டினார். ஆனால் இது தனது தேசபக்திக்கு அவமானம் எனக் கூறி கல்லூரியை விட்டு வெளியேறினார்.

புரட்சி நடவடிக்கைகள்
எனினும் தேசவிடுதலை இவரை அழைத்துக் கொண்டது. புரட்சி அமைப்புகள் இவரை கைநீட்டி வரவேற்றன. அய்யலூர் ரயில்வே நிலையத்துக்கு 7 மைல் தூரமுள்ள பஞ்சந்தாங்கிப் பள்ளத்தாக்குப் பகுதியில் துப்பாக்கி சுடும் பயிற்சி பெற்றார். இதற்காக மகாகவி பாரதியாரின் நெருங்கிய நண்பர் முத்துக்குமாரசாமிப் பிள்ளை மூலம் துப்பாக்கிகள் வாங்கிக்கொண்டார். இங்கு புதுவை விடுதலை வீரர் வ. சுப்பையாவைச் சந்தித்தார். "யுனிவர்சிட்டி டிரைனிங் கோர்" படையில் துப்பாக்கி சுடும் போட்டியில் வெற்றி பெற்ற பாஷ்யம் தனது நண்பர்களுக்கும் இப்பயிற்சியை அளித்தார். புரட்சியாளர் சங்கத்தில் உறுப்பினராகி, காளி படத்தின் முன் ரத்தக் கையெழுத்திட்டு உறுதிமொழி எடுத்துக் கொண்டார்.

கொலை முயற்சி
சேரங்குளத்துக்குத் திரும்பிய பாஷ்யம் தேசத்திற்காக ஏதாவது செய்யவேண்டும் எனத் துடித்தார். அப்போது கவர்னர் மார்ஷ் பாங்ஸ் என்பவர் சிதம்பரம் நடராஜர் பூங்காவிற்கு அடிக்கல் நாட்ட வருவதாக செய்தி கிடைத்தது. எனவே பாஷ்யம் சிதம்பரம் சென்றார். சட்டைப்பையில் மறைத்து வைத்துக்கொண்ட துப்பாக்கியுடன் கவர்னர் கலந்து கொண்ட கூட்டத்திற்குச் சென்று அவரைச் சுட முயன்று, முடியாமல் போனது. தஞ்சை திரும்பி தனது நண்பர் கோபாலகிருஷ்ணனிடம் சொல்லி வருத்தப்பட்டார். அவர் பாஷ்யத்தின் செயலை ஏற்றுக் கொள்ளவில்லை. இனி இதுபோன்ற செயல்களை விடுத்து மகாத்மாவைப் பின்பற்றும்படி அறிவுரை கூறினார்.



வங்கிக்கொள்ளை
விடுதலைப் புரட்சிக்காகப் பணம் தேவைப்பட்டது. எனவே மதுரை இம்பீரியல் வங்கியைக் கொள்ளை அடிக்கத் திட்டம் தீட்டினார். ஆனால் ராமசாமி, மாரியப்பன் என்ற இரு நண்பர்கள் அவசரப்பட்டு முயற்சியில் இறங்கி தோல்வியடைந்து காவலர்களிடம் சிக்குண்டனர். சித்திரவதைக்கு உள்ளானதில் மாரியப்பன் என்பவர் பாஷ்யத்தின் பெயரைக் காட்டிக்கொடுத்தார். ஆனால் பாஷ்யம் இரவோடு இரவாக தடயங்களை எல்லாம் அழித்துவிட்டு தனது அறைக்குச் சென்றார். விடிந்ததும் இவரைக் கைது செய்த காவலர்கள், இரண்டு மாதங்கள் சித்திரவதை செய்துவிட்டு இவர் மீது எந்த ஆதாரமும் இல்லையென விடுதலை செய்தனர். ஆனால் சதிகாரக் கேடி என்ற பட்டியலில் இவர் பெயர் சேர்க்கப்பட்டது.

சுதேசி இயக்கமும் சேவாதளமும்
1931இல் சென்னை சென்று தமையனார் வீட்டில் தங்கினார். போலீஸ் கண்காணிப்பு இருந்தும், இவர் கதர் அணிந்து கதர் துணி விற்பனை செய்தார். அந்நிய துணிகளை வாங்காதீர்கள் என்று வேண்டுகோள் விடுத்தார். அதன் பயனாய் துணிக்கடைக்காரர்கள் இவர் மீது வெற்றிலைப் பாக்கு எச்சிலை உமிழ்ந்தார்கள், சிகரெட் துண்டுகளை நெருப்புடன் வீசினார்கள். ஐஸ் ஹவுஸ் பகுதியில் கள்ளுக்கடை முன்பு மறியல் செய்த போது கடைக்காரர் பாஷ்யத்தின் தலையில் கள்ளுப்பானையைப் போட்டு உடைத்தார். இந்துஸ்தான் சேவாதளத்தின் தலைவர் டாக்டர் ஹார்டிகார் சென்னைக்கு வந்த போது சேவாதளத் தொண்டராக பாஷ்யத்தைச் சேர்த்துகொண்டார். பகல்கோட் நகரில் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தபோது, லண்டன் வட்டமேசை மாநாடு தோல்வி, தாயகம் திரும்பிய காந்தி கைது ஆகியவை நடைபெற்றன. வைசிராய் வெல்லிங்டன் நாடு முழுவதும் அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டார். இதனால் அரசியல் இயக்கங்கள், கூட்டங்கள் தடை செய்யப்பட்டன. எனவே சேவாதளத்தைக் கலைத்த ஹார்டிகார், தொண்டர்கள் அவரவர் பகுதிக்குச் சென்று தடை உத்தரவுகளை மீறிச் சிறைபுக வேண்டும் எனக் கூறி தொண்டர்களை அனுப்பினார். பாஷ்யம் சென்னை திரும்பினார்.

கோட்டையில் தேசிய மூவண்ணக் கொடியை ஏற்றுதல்
ஜவஹர்லால் நேரு ஜனவரி 26-ஆம் தேதியை நாட்டு மக்கள் சுதந்திர தினமாகக் கொண்டாடுமாறு அறைகூவல் விடுத்தார். அதனை ஏற்று பாஷ்யம் ஒரு சாகசத்துக்கு தயாரானார். பெரிய தேசிய மூவண்ணக் கொடியொன்றை இவரே தைத்துக் கொண்டார். நடுவில் மையினால் ராட்டை வரைந்து கொண்டார். அதன் கீழ் "இன்று முதல் இந்தியா சுதந்திரம் அடைகிறது" என்று எழுதினார். ஜனவரி 25, மாலை 7 மணிக்கு கொடியைத் தன் உடைக்குள் மறைத்துக் கொண்டு, தன்னுடன் தியாகி சுப்பிரமணிய சிவாவின் மருமகன் வேணுகோபாலனைத் தன்னைப் பின் தொடரும்படி சொல்லிவிட்டுச் சென்றார். ஒரு திரைப்படக் கொட்டகை சென்று சினிமா பார்த்துவிட்டு நள்ளிரவு 12 மணிக்கு காவலர் உடையில் ரகசியமாக தென்புற வாயில் வழியாகக் கோட்டைக்குள் நுழைந்தார். அங்கு 140 அடி உயரமும் 3 அடி குறுக்களவும் உள்ள கம்பத்தில் ஏறினார். அப்போது சென்னைக் கலங்கரை விளக்கில் உள்ள சுழலும் விளக்கின் வெளிச்சம் இக்கம்பத்தின் மீது பட்டது. அதுபடும் நேரத்தைக் கணக்கிட்டுத் திட்டமிட்டு, ஒளி படும்போதெல்லாம், கம்பத்தின் மறுபுறம் ஒளிந்து ஏறி யூனியன் ஜாக் என்ற பிரித்தானியரின் கொடியை இறக்கிவிட்டு அதில் இந்திய தேசியக் கொடியை ஏற்றிவிட்டு இறங்கி ஓடி தப்பிவிட்டார். காலையில் இக்கொடியினைக் கண்ட கோட்டை ராணுவ வீரர்கள் பதட்டமடைந்தனர். கவர்னருக்குச் செய்தி போயிற்று. இதனைச் செய்தவரைக் கண்டுபிடிக்க போலீஸ் தலைகீழாக நின்றும் பயனில்லை. இன்று வரை அந்த செயலைச் செய்தவர் கண்டுபிடிக்கப்படவில்லை என்றுதான் அரசாங்க ஆவணங்கள் கூறுகின்றன.

துணிக்கடைகளில் தீ விபத்து
அதுமட்டுமல்ல சென்னை ஜார்ஜ் டவுன் பகுதிகளில் அந்நிய துணிகளை விற்கும் பிரம்மாண்டமான கடைகளில் பாஷ்யமும் அவரது நண்பர்களும் துணிகள் வாங்குவது போல் சென்று ஆடைகளுக்குள் செல்லுலாய்டு பெட்டி எனப்படும் ஒரு சிறிய பெட்டியை திணித்துவிடுவார்கள். எனவே இவர்கள் வெளிவந்த சிறிது நேரம் கழித்து அக்கடைகள் அடிக்கடி தீப்பற்றி எரிந்தன. ஆனால் இதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை.

வெள்ளையனே வெளியேறு இயக்கம்
பாஷ்யம் அப்போது கம்யூனிஸ்டுகளாக இருந்த அமீர்ஹைதர் கான், சி.எஸ். சுப்பிரமணியம், புதுச்சேரி சுப்பையா ஆகியோரோடு தொடர்பு வைத்திருந்தார். இந்த நிலையில் 1942இல் ஆகஸ்ட் புரட்சி தொடங்கியது. பாஷ்யம் துப்பாக்கிகளைக் கடத்துதல், தண்டவாளங்களைத் தகர்த்தல், பாலங்களை வெடிவைத்துத் தகர்த்தல் ஆகிய புரட்சிகளில் ஈடுபட்டார்.

# மேற்காசிய போர் நிறுத்தம் நீட்டிப்பு: இந்தியா வரவேற்பு

**புதுடெல்லி, ஏப்.24:**

அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான மேற்காசிய போர் நிறுத்தம் நீட்டிக்கப்பட்டுள்ளதை இந்தியா வரவேற்றுள்ளது. இது தொடர்பாக வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் கூறியுள்ளதாவது:

“இந்தியா எப்போதும் அமைதிக்கு ஆதரவாக நிற்கும். அமைதி மற்றும் ஸ்திரத்தன்மை சார்ந்து முன்னெடுக்கப்படும் அனைத்து நடவடிக்கையையும் இந்தியா வரவேற்கும். மேற்காசிய போர் நிறுத்தத்தை இந்தியா ஏற்கெனவே வரவேற்றுள்ளது. அரசாங்க ரீதியிலான பேச்சுவார்த்தை மூலம் இந்த மோதலை முழுவதுமாக முடிவுக்கு கொண்டு வர முடியும் என நம்புகிறோம்.

மேற்காசிய மோதல் காரணமாக உலக மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். சர்வதேச அளவில் எரிசக்தி விநியோகம் மற்றும் வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளது. ஹார்முஸ் ஜலசந்தி வழியாக தடையில்லாத வகையில் கப்பல் போக்குவரத்து உறுதி செய்யப்பட வேண்டும் என எதிர்பார்க்கிறோம்” என அவர் கூறியுள்ளார்.

# இந்தியா - சீனா இடையே நேரடி விமான போக்குவரத்து மீண்டும் தொடக்கம்




**புதுடெல்லி, ஏப்.24:**

இந்தியா - சீனா இடையிலான நேரடி விமான போக்குவரத்து சேவைகள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளன. இதன் ஒரு பகுதியாக, ஏர் சீனா நிறுவனம், பெய்ஜிங் - டெல்லி இடையிலான தனது விமான சேவையை செவ்வாய்க்கிழமை தொடங்கியுது.கடந்த 2020-ம் ஆண்டு நிலவிய கல்வான் பள்ளத் தாக்கு மோதல் மற்றும் கரோனா பரவல் காரணமாக இரு நாடுகளுக்கும் இடையே நேரடி விமான சேவை நிறுத்தப்பட்டிருந்தது. இந்த நிலையில், தற்போது படிப்படியாக விமான சேவை இயல்பு நிலைக்குத் திரும்பி வருகிறது.

இதுகுறித்து சீனாவின் ‘குளோபல் டைம்ஸ்’ இதழ் வெளியிட்டுள்ள செய்தி: பெய்ஜிங் மற்றும் டெல்லி இடையிலான நேரடி விமான சேவையை செவ்வாய், வெள்ளி, ஞாயிற்றுக்கிழமை என வாரத்திற்கு 3 நாட்களில் ஏர் சீனா வழங்க உள்ளது. இதற்காக ஏர்பஸ் 330 ரக விமானங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பெய்ஜிங்கில் இருந்து மதியம் 3:15 மணிக்கு புறப்படும் ஏர் சீனா விமானம், இந்திய நேரப்படி இரவு 8:20 மணிக்கு டெல்லியை வந்தடையும். இதன் ஆரம்பக் கட்ட பயணக்கட்டணம் சுமார் 3,570 யுவான் அதாவது சுமார் ரூ.49,000- ஆக (சுமார் 523 அமெரிக்க டாலர்) என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஏர் சீனா நிறுவனத்தைத் தொடர்ந்து, பிற விமான நிறுவனங்களும் தங்களது சேவையை விரிவுபடுத்தி வருகின்றன. சீனா ஈஸ்டர்ன் ஏர்லைன்ஸ் கடந்த ஏப்ரல் 18-ம் தேதி முதல் குன்மிங் - கொல்கத்தா இடையிலான சேவையைத் தொடங்கியது. முன்னதாக, 2025 நவம்பரில் ஷாங்காய் - டெல்லி சேவையை இந் நிறுவனம் மீண்டும் தொடங்கியது. இந்திய நிறுவனமான இண்டிகோ, மார்ச் 30-ம் தேதி முதல் கொல்கத்தா - ஷாங்காய் தினசரி நேரடி விமான சேவையைத் தொடங்கியுள்ளதாக குளோபல் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

# ஐ–பேக் அலுவலக சோதனையில் தலையீடு: மம்தா பானர்ஜிக்கு உச்ச நீதிமன்றம் கண்டனம்



**புதுடெல்லி, ஏப்.24:**

மேற்கு வங்க மாநிலத்தில் நிலவும் சமூக- அரசியல் சூழலை அசாதாரணமான ஒரு சூழ்நிலை என்று உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது.


மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவில் ஐ-பேக் அலுவலகத்தில் அமலாக்கத் துறை கடந்த ஜனவரியில் சோதனை நடத்தியது. அப்போது திடீரென வந்த முதல்வர் மம்தா அந்த வளாகத்திற்குள் நுழைந்து, ஐ-பேக் தொடர்பான கோப்புகளை கைப்பற்றி சென்றார். இது தொடர்பான வழக்கு நீதிபதிகள் பி.கே. மிஸ்ரா மற்றும் என்.வி. அஞ்சாரியா அடங்கிய அமர்வு முன்பாக நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதிகள் கூறியதாவது: "இது மாநிலத்திற்கும் மத்திய அரசுக்கும் இடையிலான சாதாரண மோதல் அல்ல. ஒரு புலனாய்வு அமைப்பு விசாரணை நடத்திக் கொண்டிருக்கும் இடத்திற்கு, பதவியில் இருக்கும் ஒரு முதல்வர் நேரில் செல்வார் என்று நாங்கள் ஒருபோதும் நினைத்துப் பார்த்ததில்லை. எந்தவொரு மாநில முதல்வரும் விசாரணையின் நடுவே இதுபோன்று உள்ளே நுழைந்து ஜனநாயகத்தைப் பேராபத்தில் ஆழ்த்திவிட்டு, இதை மத்திய- மாநில அரசு இடையிலான மோதலாக சித்தரிப்பதை ஏற்க முடியாது. இது, ஒரு முதல்வர் என்ற அதிகாரத்தில் இருப்பவர் தனிப்பட்ட முறையில் மேற்கொண்ட அத்துமீறல் நடவடிக்கை. இதன் மூலம் ஒட்டுமொத்த ஜனநாயகமே ஆபத்துக்கு உள்ளாகியுள்ளது. மாநிலத்தில் நிலவும் நடைமுறை யதார்த்தங்களை நீதிமன்றம் கவனிக்காமல் புறந்தள்ள முடியாது. இது ஒரு விதிவிலக்கான சூழல். ஏற்கெனவே ஒரு வழக்கில் (எஸ்ஐஆர் வழக்கு) நீதிமன்ற அதிகாரிகள் பிணைக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்ததை நாங்கள் கண்டோம். யதார்த்தத்தை எங்களால் மூடி மறைக்க முடியாது. நீங்கள் சட்ட ரீதியாக நுணுக்கமான வாதங்களை முன்வைக்கலாம்.

ஆனால் மாநிலத்தில் நடக்கும் நடைமுறைச் சிக்கல்களை நாங்கள் கவனிக்காமல் கண்ணை மூடிக் கொண்டு சும்மா இருக்க முடியாது.

இவ்வாறு நீதிபதிகள் கூறினர்.

# தொல்லை தரும் அண்டை நாடு: அமைச்சர் ராஜ்நாத் சிங் சூசகம்



**புதுடெல்லி, ஏப்.24:**

ஜம்மு-காஷ்மீரின் பஹல்காமில் தீவிர வாதிகள் தாக்குதல் நடத்தியதில் 26 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவம் நடந்து நேற்றுடன் ஓராண்டு நிறைவடைந்தது.

இது தொடர்பாக டெல்லியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் கலந்துகொண்டு பேசியதாவது: ’ஆபரேஷன் சிந்தூர்’ நடவடிக்கையில் நமது ராணுவம் என்ன சாதித்துள்ளது என்பதை நான் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை. நமது ராணுவ வலிமை முன்னெப்போதையும் விட பன் மடங்கு வலுப் பெற்றுள்ளது.

இந்தியா உலகிலுள்ள எந்த நாட்டையும் தாமாக முன்வந்து தாக்கியதே இல்லை. ஆனால், அண்டை நாடு ஏதேனும் ஒன்று வம்பு செய்ய முயன்றால், அதன் பிறகு விளைவு கடுமையாக இருக்கும். மற்ற அண்டை நாடுகள் நமது நாட்டுடன் நட்புடன் உள்ளன. நமக்கு ஒரே ஒரு அண்டை நாடு மட்டுமே தொல்லை கொடுத்து வருகிறது. இவ்வாறு அவர் பேசினார்.

தொல்லை கொடுத்து வரும் அண்டை நாடு பாகிஸ்தான் என்பதை மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் சூசகமாக இங்கு குறிப்பிட்டார். சில நாட்களுக்கு முன்பு பாகிஸ்தான் அமைச்சர் கவாஜா ஆசிப் பேசும்போது, "இந்தியா மீண்டும் வாலாட்டினால் நாங்கள் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க மாட்டோம். எந்த செயலுக்கும் வலுவான பதிலடி கிடைக்கும். எங்களைச் சீண்டினால் கொல்கத் தாவைக் குறிவைப்போம்" என்று பேசியிருந்தார்.

அவருக்கு பதிலடி கொடுக்கும் விதமாகவே மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் இவ்வாறு சூசகமாகப் பேசியுள்ளார்

# மேற்கு வங்கத்தில் முதல் கட்டத் தேர்தல் 2026! விறுவிறுப்பான வாக்குப்பதிவு



**கொல்கத்தா, ஏப்.24:**

மேற்கு வங்க மாநிலத்தில் முதல்கட்ட தேர்தல் நடைபெறும் 152 தொகுதிகளில் காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியது.

காலை 7 மணி முதலே வாக்குச்சாவடிகளில் மக்கள் வரிசையில் நின்று வாக்களித்து வருகிறார்கள். முக்கிய அரசியல் கட்சித் தலைவர்களும், பிரபலங்களும் வாக்களித்து வருகிறார்கள்.

மேற்கு வங்கத்தில் முதல்கட்ட பேரவைத் தேர்தலுக்கான பிரசாரம் செவ்வாய்க்கிழமையுடன் நிறைவடைந்தது. 152 தொகுதிகளில் இன்று அமைதியான முறையில் வாக்குப்பதிவு தொடங்கியிருக்கிறது. இதையொட்டி, பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

294 உறுப்பினர்களைக் கொண்ட மேற்கு வங்க சட்டப் பேரவைக்கு இரு கட்டங்களாக தேர்தல் நடைபெறுகிறது. முதல்கட்டமாக 152 தொகுதிகளுக்கு இன்றும், இரண்டாம் கட்டமாக 142 தொகுதிகளுக்கு ஏப்.29-ஆம் தேதியும் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. மே 4-இல் வாக்குகள் எண்ணப்பட்டு, முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

இந்த முதல்கட்ட தேர்தலில் மொத்த வாக்காளர்கள் 3.60 கோடி பேர் (ஆண்கள் 1.84 கோடி, பெண்கள் 1.75 கோடி, மூன்றாம் பாலினத்தவர் 465). இவர்கள் வாக்களிக்க வசதியாக, 44,378 வாக்குப்பதிவு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சுமார் 2.5 லட்சம் பாதுகாப்புப் படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# கபடி போட்டியில் பந்தயம்: கர்நாடக அமைச்சர் மீது வழக்கு

**பெங்களூரு, ஏப். 24:**

கர்நாடக மாநிலம் தும்கூரில் கடந்த பிப்ரவரியில் கல்லூரி மாணவர்களுக்கான கபடி போட்டி நடைபெற்றது. இதில் பங்கேற்ற உள்துறை அமைச்சர் ஜி.பரமேஸ்வரா, நட்பின் அடிப்படையில் விஜயபுரா அணி வெற்றி பெறும் என தெரிவித்து, ரூ.500 பந்தயம் கட்டினார்.

அதற்கு மேடையில் இருந்த தும்கூர் மாவட்ட ஆட்சியர் சுபா கல்யாண், விஜயபுரா அணி தோற்கும் என கூறினார். இறுதியில் தட்சிண கன்னட அணி விஜயபுராவை 36- 26 என்ற புள்ளிக் கணக்கில் தோற்கடித்து வெற்றி பெற்றது.

வெற்றி பெற்ற அணிக்கு பரிசுகளை வழங்கும் போது, அமைச்சர் பரமேஸ்வரா, தான் தோற்றுவிட்டதாகக் கூறி பந்தய பணமான ரூ.500-ஐ வழங்கினார். இது குறித்து சமூக செயற்பாட்டாளர் எச்.ஆர்.நாகபூஷன் என்பவர், பெங்களூரு சிறப்பு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். அதை ஏற்ற நீதிபதி கே.என்.சிவகுமார், பரமேஸ்வரா மீது முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து விசாரணை நடத்த காவல் துறைக்கு உத்தரவிட்டார்.

# கங்கோத்ரி கோயிலுக்கு செல்ல பஞ்சகவ்யம் உட்கொள்வது கட்டாயம்

**டேராடூன், ஏப்.24:**

உத்தராகண்டில் சார்தாம் யாத்திரை தொடங்கியுள்ள நிலையில், இந்து அல்லாதவர்கள் கோயிலுக்குள் நுழைவதற்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

கங்கோத்ரி கோயில் நிர்வாகக் குழுவின் தீர்மானத்தின் படி, இந்து அல்லாதவர்கள் ‘பஞ்சகவ்யம்’ உட்கொண்டால் மட்டுமே கோயிலுக்குள் நுழைய அனுமதிக்கப்படுவார்கள்.

அவர்கள் சனாதன தர்மத்தை பின்பற்றுகிறார்கள் என்பதை உறுதிப்படுத்த, பசுவின் சிறுநீர் உள்ளிட்ட பொருட்கள் கலந்த பஞ்சகவ்யத்தை உட்கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக கங்கோத்ரி கோயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

பசுவின் பால், தயிர், நெய், கோமியம் (பசுவின் சிறுநீர்) மற்றும் பசுவின் சாணம் ஆகிய 5 பொருட்களுடன் கங்கை நீரும் கலந்த கலவையே பஞ்சகவ்யம் ஆகும்.

இதுகுறித்து யமுனோத்ரி கோயில் நிர்வாக செய்தித் தொடர்பாளர் புருஷோத்தம் உன்னியல் கூறும்போது, “நாங்கள் பல காலங்களாக பஞ்ச கவ்ய பாரம்பரியத்தைப் பின்பற்றுகிறோம். சனாதனத்தின் மீது ஈடுபாடு இல்லாதவர்களின் வருகை அதிகரித்து வருகிறது. எனவே, சனாதனிகள் மட்டுமே சன்னதியில் தரிசனம் செய்ய இந்த நடவடிக்கை அனுமதிக்கும்” என்றார்.

# மணிப்பூர் கலவரம் காரணமாக இதுவரை 58,821 பேர் இடம்பெயர்வு; 217 பேர் உயிரிழப்பு




**இம்பால், ஏப்.24:**

2023-ஆம் ஆண்டு மே 3-ஆம் தேதி இனக்கலவரம் வெடித்தது முதல் இந்த ஆண்டு மார்ச் 30 வரையிலான காலகட்டத்தில், மணிப்பூரில் மொத்தம் 58,821 பேர் இடம்பெயர்ந்துள்ளதாகவும், 217 பேர் உயிரிழந்துள்ளதாகவும் மாநில அரசு தெரிவித்துள்ளது.

மணிப்பூர் காங்கிரஸ் தலைவர் ஹரேஷ்வர் கோஸ்வாமி தாக்கல் செய்த தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுவுக்குப் பதிலளிக்கும் விதமாக, ஏப்ரல் 20 அன்று உள்துறைச் செயலகம் இந்தப் புள்ளிவிவரங்களை வழங்கியது.

மே 2023 முதல் இனக்கலவரம் தொடர்பாக உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை குறித்துப் பதிலளித்த அத்துறை, ‘உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்ட கருணைத் தொகையின் அடிப்படையில் இதுவரை 217 பேர் உயிரிழந்துள்ளனர்’ என்று குறிப்பிட்டது.

மார்ச் 10, 2026 நிலவரப்படி மணிப்பூரில் நிவாரண முகாம்களின் எண்ணிக்கை 174 ஆக இருந்ததாகவும், அதே வேளையில் மணிப்பூர் காவல் துறை வீட்டு வசதி வாரியக் கழகத்தால் 3,000 வீடுகள் கட்டப்பட்டுள்ளதாகவும் அது தெரிவித்தது. இனக் கலவரத்தால் மே 3, 2023 முதல் 7,894 நிரந்தர வீடுகள் முழுமையாகவும், 2,646 வீடுகள் பகுதியளவும் சேதமடைந்துள்ளதாகவும் உள்துறை அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

இந்த தகவல்கள் வெளியானபின்னர் மணிப்பூர் காங்கிரஸ் தலைவர் ஹரேஷ்வர் கோஸ்வாமி வெளியிட்ட சமூக ஊடகப் பதிவில், உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் குறித்த தகவல்களைப் பெறுவதற்குத் தனக்கு ஏழு மாத கால முயற்சி தேவைப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பள்ளத்தாக்குப் பகுதியைச் சேர்ந்த மேதி சமூகத்தினருக்கும், மலை மாவட்டங்களில் வசிக்கும் குக்கி சமூகத்தினருக்கும் இடையே மே 2023-இல் வெடித்த இனக்கலவரம் 2 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்தது.

தற்போதும் கூட அம்மாநிலத்தில் அங்காங்கே வெடிக்கும் வன்முறையால், அவ்வப்போது பதற்றமான சூழல் உருவாகி வருகிறது என்பது கவனிக்கத்தக்கது.

# நாட்டின் பல பகுதிகளில் 5 நாட்களுக்கு வெப்ப அலை: இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை




**புதுடெல்லி, ஏப்.24:**

இந்தியாவில் பஞ்சாப், ஹரியாணா, சண்டிகர் மற்றும் டெல்லியின் சில பகுதிகளில் ஏப்ரல் 24 மற்றும் 25 ஆகிய தேதிகளில் வெப்ப அலை நிலவ வாய்ப்புள்ளது என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மேற்கு உத்தரப்பிரதேசத்தில் ஏப்ரல் 23 முதல் 25 வரையிலும், கிழக்கு உத்தரப்பிரதேசத்தில் ஏப்ரல் 22 முதல் 26 வரையிலும், ராஜஸ்தானில் ஏப்ரல் 24 முதல் 26 வரையிலும், மத்தியப் பிரதேசத்தில் ஏப்ரல் 23 முதல் 26 வரையிலும், விதர்பா மற்றும் சத்தீஸ்கரில் ஏப்ரல் 24 முதல் 27 வரையிலும், மேற்கு வங்கம், பிஹார் மற்றும் ஜார்க்கண்டில் ஏப்ரல் 22 மற்றும் 23 ஆகிய தேதிகளிலும் வெப்ப அலை நிலவக் கூடும். ஒடிசா, கடலோர ஆந்திரப் பிரதேசம், ஏனாம், மேற்கு வங்கம், தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால், கேரளா, மாஹே, கடலோர கர்நாடகா மற்றும் குஜராத்தின் கடலோரப் பகுதிகளின் ஆங்காங்கே உள்ள சில இடங்களில் ஏப்ரல் 22 முதல் ஏப்ரல் 25 வரையிலான காலகட்டத்தில் வெப்பமான வானிலை நிலவக்கூடும்.

இந்தக் காலகட்டத்தில், ஹரியாணா, சண்டிகர், டெல்லி, ஒடிசா, கொங்கண் மற்றும் கோவாவில் இரவுகளிலும் வெப்பமான வானிலை இருக்கக் கூடும்.

இதற்கிடையில், வடகிழக்கு மற்றும் கிழக்கு இந்தியாவின் சில பகுதிகளில், இந்த வாரத்தில் இடியுடன் கூடிய மழை மற்றும் மின்னலுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

‘தமிழகத்தின் உள் மாவட்டங்களில் நாளை முதல் 26-ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஒரு சில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக் கூடும். கடலோர தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை வழக்கமான அளவை ஒட்டியே இருக்கக்கூடும்’ என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# சபர்மதி ஆற்றில் தங்கம், வெள்ளி நகைகளை தேடும் மக்கள்

**அகமதாபாத், ஏப்.24:**

குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் ஓடும் சபர்மதி ஆற்றங்கரையில் சுற்றுலா பயணிகள் பொழுதுபோக்குக்காக கூடுவர். இங்கு மக்கள் ஆற்றில் இறங்கி குளிப்பது வழக்கம். சில பயணிகள் வேண்டுதலுக்காக ஆற்றில் காசுகள், தங்கம், வெள்ளி நகைகளை போடுவதும் வழக்கம். சிலர் குளிக்கும்போது தங்க, வெள்ளி ஆபரணங்களை இழப்பதும் உண்டு. சபர்மதி ஆற்றில் உள்ள வஸ்னா தடுப்பணையின் கதவுகளில் பராமரிப்பு பணி மேற்கொள்வதற்காக தடுப்பணை மூடப்பட்டது. இதனால் சபர்மதி ஆற்றில் தண்ணீர் வரத்து குறைந்து வறண்டு காணப்படுகிறது. இதனால் சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை சபர்மதி ஆற்றங்கரையில் குவிந்து ‘புதையலை’ தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஒருவருக்கு வெள்ளி நாணயம் கிடைத்ததாக கூறப்படுகிறது. பெரும்பாலும், துருப்பிடித்த இரும்பு பொருட்கள், வீட்டு உபயோகப் பொருட்கள்தான் அங்கு கிடைக்கின்றன. ஆனாலும் பலர் கடும் வெயிலை பொருட்படுத்தாமல் தேடி வருகின்றனர்.

# மணிப்பூர்: போராட்டத்தில் கலந்து கொண்டு வன்முறையில் ஈடுபட்ட 2 காவலர்கள் கைது

**இம்பால், ஏப்.24:**

மணிப்பூர் மாநிலத்தில் கடந்த 2023-ம் ஆண்டு மே மாதம் குக்கி மற்றும் மெய்தி இன மக்களிடையே ஏற்பட்ட மோதல் மிகப்பெரிய கலவரமாக வெடித்தது. மணிப்பூரில் அமைதியை கொண்டு வர அரசு சார்பில் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும், அவ்வப்போது சில வன்முறை சம்பவங்கள் தொடர்ந்து அரங்கேறி வருகின்றன. அந்த வகையில், கடந்த 7-ந்தேதி பிஷ்னுபூர் மாவட்டத்தில் ஆயுதக்குழுவினர் நடத்திய குண்டுவீச்சு தாக்குதலில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 5 வயது ஆண் குழந்தையும், 6 மாத பெண் குழந்தையும் உயிரிழந்தனர். அந்த குழந்தைகளின் தாய் படுகாயமடைந்தார். இந்த தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து மணிப்பூரில் போராட்டங்கள் வெடித்தன. இந்த தாக்குதல் தொடர்பான விசாரணை என்.ஐ.ஏ. அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மணிப்பூர் முதல் மந்திரி கேம்சந்த் சிங் தெரிவித்தார்

இந்த நிலையில், இம்பால் கிழக்கு மாவட்டத்தில் நடந்த போராட்டத்தில் கலந்து கொண்டு வன்முறையில் ஈடுபட்ட 2 காவலர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.




# கம்போடியாவுக்கு ஆட்களை கடத்த முயன்ற 4 பேர் கும்பல் கைது: சைபர் க்ரைம் போலீஸார் நடவடிக்கை



**சென்னை, ஏப்.24:** டேட்டா என்ட்ரி வேலை என்ற பெயரில் சைபர் மோசடிகளில் ஈடுபடுத்துவதற்காக தமிழகத்திலிருந்து கம்போடியாவுக்கு ஆட்களை கடத்த முயன்ற 4 பேர் கும்பலை, சைபர் க்ரைம் போலீஸார் கைது செய்தனர்.

வெளிநாட்டு வேலை என்ற பெயரில் ஏழைகளை குறி வைத்து, அவர்களுக்கு அதிக சம்பளம் தருவதாக ஆசை வார்த்தை கூறி வெளிநாட்டுக்கு அழைத்துச் சென்று, அவர்களுக்கு தெரியாமலே அவர்களை அக்கும்பல் கம்போடியாவில் உள்ள சைபர் மோசடி கும்பலிடம் விற்பனை செய்ய முயல்வதாக, தமிழக சைபர் க்ரைம் போலீஸாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

குறிப்பாக, மதுரை, மேலூரைச் சேர்ந்த சிலரை வெளிநாட்டில், ‘டேட்டா என்ட்ரி’ வேலை என்ற பெயரில் சில முகவர்கள் அணுகி உள்ளனர். அதிக சம்பளம், எளிதான வேலை, இலவச தங்கும் இடம் வழங்குவதாக உறுதி அளித்துள்ளனர். இதற்கு சம்மதம் தெரிவித்தவர்களுக்கு தட்டச்சு சோதனை வீடியோ நேர்காணல் மற்றும் மருத்துவ பரிசோதனை போன்றவற்றை போலியாக நடத்தியுள்ளனர்.

இதில் தேர்வானவர்களை கம்போடியாவுக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடுகள் நடைபெற்றுள்ளன. இதை அறிந்த மாநில சைபர் க்ரைம் கூடுதல் டிஜிபி அனிஷா ஹுசைன், இந்த கும்பலை கைது செய்ய உத்தரவிட்டார். அதன்படி, அப்பிரிவு எஸ்.பி. ஷஹ்னாஸ் தலைமையிலான தனிப்படை போலீஸார் விசாரித்தனர்.

இதில், மோசடி கும்பல் மதுரையைச் சேர்ந்தவர்களை சென்னை விமான நிலையத்திலிருந்து விமானம் மூலம் வெளிநாட்டுக்கு அழைத்துச் சென்று, அங்கு கம்போடியா நாட்டு சைபர் மோசடி கும்பலிடம் விற்பனை செய்ய திட்டமிட்டது தெரிந்தது.

இதையடுத்து, சென்னை விமான நிலையத்தில் கண்காணித்து 3 முகவர்கள் மற்றும் 1 வழிகாட்டி என 4 பேரை கைது செய்தனர். மேலும், சைபர் மோசடி கும்பலுக்கு விற்பனை செய்யப்பட இருந்தவர்களை மீட்டு குடும்பத்தினரிடம் ஒப்படைத்தனர்.

சைபர் மோசடி கும்பலிடம் விற்பனை செய்யப்படுபவர்கள் சைபர் குற்றச் செயல்களில் ஈடுபடகட்டாயப்படுத்தப்படுகிறார்கள். மறுப்பவர்கள் அல்லது இலக்கை சாதிக்காதவர்கள் அடித்து துன்புறுத்தப்படுகிறார்கள்.

எனவே, வெளிநாட்டு வேலை பெறுவதற்கு முன்னர் நம்பகத் தன்மை குறித்து தெரிந்து கொண்டு செயல்படுங்கள் என சைபர் க்ரைம் போலீஸார் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

# நடன கலைஞரிடம் பாலியல் அத்துமீறல் கல்லூரி மாணவர் கைது



**சென்னை, ஏப்.24:** அடையாறு பகுதியில் வசித்து வரும் 33 வயதுடைய பெண் நடனக் கலைஞர் கிளாசிக்கல் டான்ஸ் வகுப்பு எடுத்து வருகிறார். இவர் நேற்று முன்தினம் காலை நடன வகுப்பு எடுப்பதற்காக இருசக்கர வாகனத்தில் சாஸ்திரி நகர் 1-வது குறுக்குத் தெரு வழியாக சென்று கொண்டிருந்தார்.


அப்போது, மற்றொரு இருசக்கர வாகனத்தில் பின்தொடர்ந்து வந்த இளைஞர் ஒருவர், நடன கலைஞரிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டு தப்பி உள்ளார்.

இதில் அதிர்ச்சியடைந்த நடன கலைஞர் இது தொடர்பாக அடையாறு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் தெரிவித்தார். அதன்படி, பெண் வன்கொடுமை தடுப்பு சட்டம் உட்பட மேலும் சில பிரிவுகளின் கீழ் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர்.

இதில், பெண் நடன கலைஞரிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டு தப்பியது திருவான்மியூர் மருந்தீஸ்வரர் நகரைச் சேர்ந்த கணேஷ் (21) என்பது தெரிந்தது.

கல்லூரி மாணவரான அவரை போலீஸார் நேற்று முன்தினம் கைது செய்து சிறையில் அடைத்தனர். அவரது இருசக்கர வாகனமும் பறிமுதல் செய்யப்பட்டது.

# சர்வதேச கஞ்சா கடத்தலின் முக்கிய நபர் திருச்சியில் கைது



**திருச்சி, ஏப்.24:** தமிழகத்தில் கஞ்சா கடத்தல் வழக்கில் தேடப்பட்டு வந்த சர்வதேச அளவில் முக்கிய புள்ளியான வேதாரண்யத்தை சேர்ந்த ராமதாஸ் என்பவரை போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் (என்சிபி) திருச்சியில் கைது செய்தனர்.

இதுகுறித்து என்சிபி அதிகாரிகள் தெரிவித்துள்ளதாவது: 2020-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் நாகை மாவட்டத்தில் ஒரு லாரியில் கஞ்சா கடத்தி வரப்படுவதாக என்சிபி பிரிவினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன் அடிப்படையில், லாரியை வழிமறித்த என்சிபியினர் அந்த லாரியில் இருந்து 661.5 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

விசாரணையில், வேதாரண்யத்தை சேர்ந்த சுப்பிரமணியன் மகன் ராமதாஸ் (என்கிற) கருத்தபாண்டி கஞ்சா கடத்தலில் ஈடுபட்ட முக்கிய நபர் என்பதும், கஞ்சாவை இலங்கைக்கு கடத்தி செல்வதை வழக்கமாக வைத்திருந்தார் என்பதும் தெரியவந்தது.

இந்த வழக்கில் தொடர்புடைய மற்ற குற்றவாளிகள் அனைவரும் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட நிலையில் ராமதாஸ் மட்டும் தலைமறைவாக இருந்து வந்தார்.

இதனிடையே, போதைப்பொருள் இல்லாத இந்தியா (நஷா முக்த் பாரத்) என்ற தொலைநோக்குப் பார்வையின்படி, போதைப்பொருள் குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்படுவதை உறுதிசெய்ய போதைப் பொருள் கட்டுப்பாட்டு பணியகம் உறுதியான முயற்சிகளைத் தொடர்ந்து செய்து வருகிறது.

அந்த வகையில், நாகையில் கஞ்சா கடத்தல் வழக்கில் தேடப்பட்டு வந்த ராமதாஸ் (என்கிற) கருத்தபாண்டி சிங்கப்பூரில் இருப்பது கண்டறியப்பட்டது.

சர்வதேச ஒத்துழைப்புடன் அவரது நடமாட்டம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டது. இந்நிலையில், ஏப்.19-ம் தேதி அவர் திருச்சி விமான நிலையத்தில் வந்திறங்கியபோது என்சிபியால் கைது செய்யப்பட்டார். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தாழம்பூர் நில விவகாரம்: 6 ஆண்டு தடையை நீக்கியது உச்ச நீதிமன்றம்: தமிழக அரசுக்கு கண்டனம்



**சென்னை, ஏப்.24:** காஞ்சிபுரம் மாவட்டம் தாழம்பூர் நில விவகாரத்தில் சுமார் 6 ஆண்டுகளாக நீடித்து வந்த ‘தற்போதைய நிலையே நீடிக்க வேண்டும்’ என்ற இடைக்கால உத்தரவை உச்ச நீதிமன்றம் ரத்து செய்துள்ளது. அப்பாவி குடிமக்கள் பல தசாப்தங்களாக வைத்திருக்கும் நில உரிமைகளை அரசு தன்னிச்சையாகப் பறிக்க முடியாது, என்று கூறியுள்ள நீதிபதிகள், நில உரிமையாளர்களுக்கு அடிப்படை வசதிகளை மறுக்கக் கூடாது என்றும் உத்தரவிட்டுள்ளனர்.

தாழம்பூர் கிராமத்தில் தியாகிகளுக்கு வழங்கப்பட்ட நிலங்கள் மற்றும் சி.இ.சத்யநாராயணா ரெட்டி என்பவருக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களில் முறைகேடுகள் நடந்ததாகக் கூறி, கடந்த 2018-ல் சென்னை உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்குத் தொடரப்பட்டது. வழக்கு விசாரணை நடந்து கொண்டிருந்தபோதே தமிழக அரசு, ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் குழு அமைத்து விசாரணையைத் தொடங்கியது.

இதற்கிடையே, கடந்த 2019ல் இந்த நிலங்களுக்கு உச்ச நீதிமன்றம் ‘ஸ்டேட்டஸ் கோ’ உத்தரவு பிறப்பித்தது. இதனால், காசா கிராண்ட் கட்டிய 800-க்கும் மேற்பட்ட வீடுகள், ராணுவ நல வாரியத்தின் 852 குடியிருப்புகள் மற்றும் அக்னி தொழில்நுட்பக் கல்லூரி உள்ளிட்ட கல்வி நிறுவனங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். வீடுகளை வாங்கிய பொதுமக்கள் பட்டா மற்றும் அடிப்படை வசதிகளின்றி 6 ஆண்டுகளாகத் தவித்து வந்தனர்.

இதனையடுத்து, பொதுநல மனுவை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம் ஏற்கனவே இந்த விவகாரத்தில் தமிழக அரசு பிறப்பித்து இருந்த தற்போதைய நிலையே தொடர வேண்டும், என்ற உத்தரவை ரத்து செய்து உத்தரவு பிறப்பித்திருந்தது. இதற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு மேல்முறையீடு செய்திருந்தது. இந்த மேல்முறையீட்டு மனுவை கடந்த 2019ம் ஆண்டு அக்டோபர் 21ம் தேதி விசாரித்த உச்சநீதிமன்றம் சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவுக்கு இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டிருந்தது. அதன் பிறகு இந்த வழக்கு தொடர்ந்து நிலுவையிலேயே இருந்து வந்தது.

இதற்கிடையில், இந்த வழக்கு விசாரணையானது உச்சநீதிமன்ற நீதிபதிகள் சஞ்சய் குமார் மற்றும் வினோத் சந்திரன் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. தமிழக அரசின் தாமதத்திற்கு கடும் கண்டனம் தெரிவித்த அமர்வு, அரசு தனது தூக்கத்திலிருந்து திடீரென விழித்துக்கொண்டு, 30 அல்லது 40 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு நிலத்தைத் தனது நிலம் என்று உரிமை கோர முடியாது.

காலச்சக்கரத்தைப் பின்னோக்கிச் சுற்றி அப்பாவி குடிமக்களின் உரிமைகளைப் பறிக்க அரசை அனுமதிக்க முடியாது, என நீதிபதிகள் தெரிவித்தனர். பல ஆண்டுகளாக ஒரு நிலத்தை அனுபவித்து வரும் நபர், அந்த நிலத்தின் மீது சட்டப்பூர்வமான உரிமையையும் எதிர்பார்ப்பையும் கொண்டிருப்பார். அதனை அரசு தன்னிச்சையாகக் கலைக்க முடியாது என நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. நில உரிமை தொடர்பாக ஏதேனும் முரண்பாடுகள் இருந்தால், அதனை உரிய காலத்திற்குள் அரசு தீர்க்க வேண்டும்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு நில உரிமை கோருவது ‘இயற்கை நீதிக்கு’ எதிரானது. ஒரு அரசு பல தசாப்தங்களுக்கு முன் நடந்த நில பரிமாற்றங்களை இப்போது வந்து ரத்து செய்ய முயலக்கூடாது. அப்பாவி குடிமக்களின் பணத்தையும், உரிமையையும் அரசு மதிக்க வேண்டும், என நீதிபதிகள் கூறினர். நில விவகாரம் நிலுவையில் உள்ளது என்பதற்காக, அங்கு வசிக்கும் மக்களுக்குத் குடிநீர், மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகளை அரசு மறுக்கக் கூடாது, எனத் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில், 2019ம் ஆண்டு முதல் அமலில் இருந்த ‘ஸ்டேட்டஸ் கோ’ உத்தரவு உடனடியாக ரத்து செய்யப்படுகிறது. ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையிலான குழு 4 மாதங்களில் விசாரணையை முடிக்க வேண்டும். அதன்பிறகு 2 மாதங்களில் அரசு இறுதி முடிவை எடுக்க வேண்டும். பல ஆண்டுகளாக உருவாக்கப்பட்டுள்ள மூன்றாம் தரப்பு உரிமைகளை அரசு கவனத்தில் கொண்டு சட்டப்படியான முடிவை எடுக்க வேண்டும், என உத்தரவு பிறப்பித்தனர்.

# திருவண்ணாமலை; கலசப்பாக்கத்தில் வாக்குப்பதிவு இயந்திரம் உடைப்பு- 4 பேர் கைது

தமிழக சட்டமன்றத் தேர்தல் இன்று நடைபெற்று வருகிறது.அரசியல் தலைவர்கள், சினிமா பிரபலங்கள், பொதுமக்கள் என அனைத்து தரப்பு மக்களும் ஆர்வத்துடன் சென்று வாக்களித்து வருகின்றனர். வாக்குச்சாவடிகளில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இந்த நிலையில், திருவண்ணாமலை மாவட்டம், கலசபாக்கத்தில் வாக்குப்பதிவு இயந்திரத்தை சுயேச்சை வேட்பாளரின் ஏஜெண்ட் ஒருவர் உடைத்ததாக சொல்லப்படுகிறது.

திரும்ப பயன்படுத்த முடியாத அளவிற்கு வாக்குப்பதிவு இயந்திரம் உடைக்கப்பட்டதால் மாற்று இயந்திரம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதையடுத்து சுயேச்சை வேட்பாளர் வெங்கடேசன் உள்பட 4 பேரை போலீசார் கைது செய்து விசாரணை செய்து வருகிறார்கள்.

இதனைத் தொடர்ந்து மாவட்டக் காவல் கண்காணிப்பாளரும், மாவட்ட ஆட்சியரும், சம்பவ இடத்திற்கு சென்றிருக்கின்றனர். வாக்குப்பதிவு இயந்திரம் உடைக்கப்பட்டது குறித்து காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# குஜராத்தில் இருந்து வண்டலூர் பூங்காவிற்கு பெண் ஆசிய காட்டு கழுதை வருகை




**சென்னை, ஏப்.24:** வண்டலூரில் உள்ள அண்ணா உயிரியல் பூங்காவில் சிங்கம், புலி, கரடி, யானை, மான்கள் உள்ளிட்ட பல அரியவகை விலங்குகளும், ஏராளமான பறவைகளும் உள்ளன. இதனைக்காண, தினந்தோறும் ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் வந்து கண்டுகளித்துவிட்டு செல்வது வழக்கம்.

இந்நிலையில், குஜராத் மாநிலத்தில் இருந்து விலங்குகள் பரிமாற்ற திட்டத்தின் கீழ், வண்டலூர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு பெண் ஆசிய காட்டு கழுதை கொண்டுவரப்பட்டுள்ளது.

இதுகுறித்து பூங்கா நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறுயிருப்பதாவது: ‘குஜராத் மாநிலத்தில் உள்ள சக்கர்பாஹ் உயிரியல் பூங்காவிலிருந்து ஒரு பெண் ஆசிய காட்டு கழுதையை விலங்கு பரிமாற்றத் திட்டத்தின் கீழ் வண்டலூர் கொண்டு வரப்பட்டுள்ளது. இதற்கு பதிலாக, வெள்ளை மயில் (1ஆண், 2 பெண்), சருகு மான் (2 ஆண், 2 பெண்) மற்றும் மஞ்சள் அனகோண்டா பாம்பு (பாலினம் குறிப்பிடப்படாத 2) வழங்கப்படுகின்றன. இந்த பரிமாற்றத்தின் மூலம், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவலிருந்து ஒற்றை ஆண் ஆசிய காட்டு கழுதைக்கு தற்போது பொருத்தமான இணை கிடைத்துள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்படி குற்ற வழக்குகளில் கைதானவர்கள் வாக்களிக்க முடியாது

**ஹரிநாடார் வழக்கில் உயர் நீதிமன்றம் விளக்கம்**

**சென்னை, ஏப்.24:** மோசடி வழக்கில் கைது செய்யப்பட்டு குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஹரிநாடார் தேர்தலில் வாக்களிக்க அனுமதிக்கக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது, தடுப்புக் காவலில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்களை மட்டும் வாக்களிக்க அனுமதிக்கலாம் என்று உயர்நீதிமன்ற மதுரை அமர்வு உத்தரவு பிறப்பித்துள்ளதாக தேர்தல் ஆணையம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

காவல் துறை தரப்பில், ஹரிநாடாருக்கு எதிராக மூன்று குற்ற வழக்குகள் உள்ளதாக விளக்கம் அளிக்கப்பட்டது.

அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 62 உட்பிரிவு 5ன் படி சட்டப்பூர்வ காவலில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்களும், குற்ற வழக்குகளில் தண்டிக்கப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளவர்களும் வாக்களிக்க முடியாது. மனுதாரர் வாக்களிக்க அனுமதிக்க முடியாது எனக் கூறி ஹரிநாடாரின் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

# விளாத்திகுளம் தொகுதியில் 4 கிராமங்களில் தேர்தல் புறக்கணிப்பு: காரணம் என்ன?



**கோவில்பட்டி, ஏப்.24:** விளாத்திகுளம் தொகுதிக்குட்பட்ட எட்டயபுரம் அருகே குளத்துள்வாய்பட்டியில் உள்ள இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமை இடமாற்றம் செய்ய வலியுறுத்தி 4 கிராம மக்கள், வீடுகளில் கருப்புக் கொடி கட்டி தேர்தலை புறக்கணித்துள்ளனர்.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் தொகுதிக்கு உட்பட்ட எட்டயபுரம் அருகே சுரைக்காய்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட குளத்துள்வாய்பட்டி கிராமத்தில் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் 45 வீடுகள் அமைந்துள்ளன. கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் உள்ளவர்களுக்கு அரசு சார்பில் புதிதாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. அதன் பின்னர் குளத்துள்வாய்பட்டி கிராம மக்கள் தங்களது விவசாய நிலங்களுக்கு செல்வதில் பிரச்சினை உருவாகியது. அவர்களுக்கும் முகாமில் உள்ளவர்களுக்கும் இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டது.

இதையடுத்து கடந்த 2 ஆண்டுகளாக இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் உள்ளவர்களை கண்காணிக்க வேண்டும். இப்பகுதியில் போதை பொருள் நடமாட்டம் அதிகமாக உள்ளதால், குளத்துள்வாய்பட்டியில் புறக்காவல் நிலையம் அமைக்க வேண்டும். புதிய வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதால், அவர்கள் தங்கியிருந்த கோழிப்பண்ணை ஷெட்டை தங்களுக்கு விவசாய விளை பொருட்கள் காய வைக்கும் களமாக பயன்படுத்த வழங்க வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

ஆனால், வட்டாட்சியர் உள்ளிட்ட அதிகாரிகள் தரப்பில் பல கட்ட பேச்சுவார்த்தை நடத்தப்பட்டும் எந்தவொரு தீர்வும் எட்டப்படாமல் அப்படியே உள்ளது. இந்நிலையில் கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 6-ம் தேதி குளத்துள்வாய்பட்டி கிராம மக்கள் கருப்பு பேட்ஜ் அணிந்து தங்களது வீடுகள் மற்றும் தெருக்களில் கருப்புக் கொடிகளை ஏற்றி, சட்டமன்ற தேர்தலை புறக்கணிப்பதாகவும் தெரிவித்தனர்.

தொடர்ந்து கடந்த 17-ம் தேதி கிராம மக்கள் சார்பில் விவசாய நிலங்களுக்கு செல்லும் பாதையில் சரல் மண் கொட்டி சமன் செய்தனர். இதற்கு முகாம் மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். மறுநாள் 18-ம் தேதி கிராம மக்களுக்கும் முகாமை சேர்ந்தவருக்கும் இடையே பிரச்சினை உருவானது. போலீஸார் மற்றும் வருவாய்த் துறையினர் குளத்துள்வாய்ப்பட்டி கிராமத்துக்கு வந்து பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமை உடனடியாக இங்கிருந்து இடமாற்றம் செய்ய வேண்டி கிராம மக்கள் உறுதியாக இருந்தனர். இதனால் பேச்சுவார்த்தை எந்தவித முடிவும் எட்டப்படாமல் போனது.

தொடர்ந்து கிராம மக்கள் இலங்கை தமிழர் முகாமை இடமாற்றம் செய்தால் மட்டுமே தேர்தலில் வாக்களிப்போம் இல்லையென்றால் தேர்தலை புறக்கணிப்போம் என அறிவித்தனர். அதன்படி இன்று காலை ஏழு மணிக்கு சட்டமன்றத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு தொடங்கியது. குளத்துள்வாய்பட்டியில் உள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் வாக்குச்சாவடி அலுவலர்கள் தயாராக இருந்தனர். இந்த வாக்குச்சாவடியில் 453 ஆண்கள், 530 பெண்கள் என மொத்தம் 983 வாக்காளர்கள் உள்ளனர். இதில் காலை 9 மணி நிலவரப்படி 5 பேர் மட்டுமே வாக்களித்தனர். 11 மணி நிலவரப்படி 8 பேர் வாக்களித்துள்ளனர்.

இந்த வாக்குச்சாவடிக்கு உட்பட்ட குளத்தூள்வாய் பட்டி, குமார கிரி, சோத்து நாயக்கன்பட்டி, அம்மா மடம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த வாக்காளர்கள் வாக்களிக்க வாக்குச்சாவடிக்கு செல்லாமல் வீடுகளில் கருப்பு கொடி கட்டி தங்கள் வீட்டு வாசலிலேயே அமர்ந்திருந்தனர். வாக்காளர்கள் இல்லாமல் வாக்குச்சாவடி வெறிச்சோடி காணப்பட்டது.

வருவாய்த்துறை மற்றும் காவல்துறையின் அலட்சியம் காரணமாகவே குளத்துள்வாய்ப்பட்டி கிராமத்தில் பிரச்சினை பெரிதாகிவிட்டது. இதற்கு ஒரே தீர்வு இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமை இங்கிருந்து வேறு இடத்துக்கு மாற்றம் செய்வது மட்டுமே, என கிராம மக்கள் தெரிவித்தனர்.

# நாமக்கல்லில் மின்னணு எந்திரம் பழுதால் ஒரு மணி நேரம் வாக்குப்பதிவு நிறுத்திவைப்பு



**நாமக்கல், ஏப்.24:** தமிழக சட்டசபைக்கு ஒரே கட்டமாக இன்று (வியாழக்கிழமை) தேர்தல் நடைபெறுகிறது. இந்த தேர்தலில் மொத்தம் 4,023 வேட்பாளர்கள் களத்தில் போட்டியிடுகின்றனர்.

இந்த தேர்தலுக்காக தமிழகம் முழுவதும் 75 ஆயிரத்து 64 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு உள்ளன. இந்த நிலையில் காலை 7 மணி முதல் வாக்குப்பதிவு தொடங்கி நடைபெற்று வருகிறது.

நாமக்கல் தொகுதிகுட்பட்ட நல்லிப்பாளையம் வாக்குச்சாவடியில் மின்னணு எந்திரம் பழுதால் வாக்குப்பதிவு ஒரு மணி நேரம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதன் பின்பு தேர்தல் அலுவலருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு புதிதாக ஒரு மின்னணு எந்திரம் கொண்டுவரப்பட்டு வாக்குப்பதிவு தொடங்கியது. முதலில் வைக்கப்பட்டிருந்த வாக்குப்பதிவு எந்திரத்தில் 236 வாக்குகள் பதிவாகியிருந்த நிலையில் அந்த வாக்குகளை மீட்பது குறித்து தேர்தல் அலுவலர்கள் ஆலோசித்து வருகின்றனர்.

# பாராசிட்டமால் மாத்திரை கொடுக்க கூடாது- சுகாதாரத்துறை எச்சரிக்கை




**சென்னை, ஏப்.24:** தமிழகத்தில் கடந்த சில நாள்களாக பல மாவட்டங்களில் 100 டிகிரி வெயில் பதிவாகி வருகிறது. இதன் காரணமாக கோடை கால நோய்கள், வைரஸ் தொற்றுகள் பரவும் சூழல் எழுந்துள்ளது. மற்றொரு புறம், இணை நோயாளிகள், குழந்தைகள், முதியவர்கள் பகல் வேளைகளில் அவசியமின்றி வெளியே வர வேண்டாம் என்று மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

அதேபோன்று வெப்பவாத பாதிப்புகளை (ஹீட் ஸ்ட்ரோக்) எதிர்கொள்ளும் வகையில் மருத்துவமனைகளில் படுக்கை வசதிகளை ஆயத்த நிலையில் வைத்திருக்குமாறு பொது சுகாதாரத்துறை தெரிவித்திருந்தது. இந்நிலையில், வெப்பவாத பாதிப்புக்கு உள்ளாவோரின் உடல் வெப்ப நிலையைக் குறைக்க மருத்துவரின் பரிந்துரையின்றி சிலர் வெவ்வேறு மாத்திரைகளை உட்கொள்வதாகத் தெரிகிறது. இதனால், கடுமையான எதிர்விளைவுகள் ஏற்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொது சுகாதாரத்துறை அதிகாரிகள் கூறியதாவது:- வெப்ப வாதம் பாதிக்கப்பட்டு எவருக்கேனும் மயக்கம் ஏற்பட்டாலோ, உடல் சோர்வாக காணப்பட்டாலோ நிழல் மற்றும் காற்றோட்டம் உள்ள இடங்களில் ஒருபக்கமாக படுக்க வைப்பது அவசியம். அவர்களை தண்ணீர், இளநீர், மோர் பருகச் செய்து உடல் வெப்ப நிலையை குறைக்கலாம்.

மேலும், நீரில் நனைத்த துணியை உடலில் வைத்து துடைத்து வெப்பத்தைத் தணிக்க வேண்டும். காய்ச்சல் என நினைத்து, ஆஸ்பிரின், பாராசிட்டமால் மாத்திரை கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். ஒருவேளை கொடுத்தால், காய்ச்சல் குறைந்தாலும், எதிர்விளைவுகளை ஏற்படுத்தும். சிலருக்கு உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடும். எனவே மருத்துவரின் பரிந்துரையின்படி மட்டுமே கோடை காலத்தில் மருந்து மாத்திரைகளை உட்கொள்ள வேண்டும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

# மணப்பாறை அருகே காவல் துறையை கண்டித்து பொது மக்கள் தேர்தலை புறக்கணித்து போராட்டம்



**திருச்சி, ஏப்.24:** மணப்பாறை அருகே காவல்துறையை கண்டித்து பொதுமக்கள் வாக்களிக்க மறுத்து போராட்டம் நடத்திய சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

திருச்சி மாவட்டம், மணப்பாறை தொகுதி வெள்ளையக்கோன்பட்டியில் அரசு தொடக்கப்பள்ளியில் வாக்குச்சாவடி எண் 225-ல் வாக்குப்பதிவு நடைபெற்று வரும் நிலையில் வாக்குச்சாவடிக்கு 100 மீட்டருக்கு அப்பால் அரசியல் கட்சியினர் தங்கள் கட்சி சின்னத்திற்கு வாக்கு கேட்டு பிரச்சாரம் செய்து கொண்டிருந்ததாக கூறப்படுகிறது. அப்போது அவ்வழியாக வந்த அதிரடிப்படை போலீஸார் அரசியல் கட்சி பிரமுகர்கள் சிலரை கலைந்து போகச் சொல்லி தாக்கியதாக கூறப்படுகிறது.

திமுக நிர்வாகி சண்முகமூர்த்தி என்பவரை தாக்கிதோடு போலீஸார் அவரை வேனில் ஏற்றி அழைத்துச் சென்றுள்ளனர். இதனால் அதிர்ச்சி அடைந்த வெள்ளையக்கோன்பட்டி பொதுமக்கள் வாக்களிப்பதை நிறுத்திவிட்டு வளநாடு கைகாட்டி - புத்தாநத்தம் சாலையில் முட்கள் மற்றும் கட்டைகளை போட்டு தடுப்பு ஏற்படுத்தி சாலை மறியலில் ஈடுபட்டு வருகின்றனர்.

போலீஸார் அழைத்துச் சென்ற சண்முகமூர்த்தியை விடுவிக்க வேண்டும். பொதுமக்களை தாக்கிய போலீஸார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கூறி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மணப்பாறை டிஎஸ்பி காவியா, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் பாலகாமாட்சி ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

பொதுமக்களின் மறியலால் சண்முகமூர்த்தி விடுவிக்கப்பட்ட நிலையிலும் பொதுமக்கள் மறியல் மற்றும் வாக்களிப்பு புறக்கணிப்பு போராட்டத்தை தொடர்ந்து வருகின்றனர்.

பொதுமக்களின் மறியலால் 11.10 மணிமுதல் மதியம் 2.40 வரை வாக்குப்பதிவு நடைபெறவில்லை. இச்சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மொத்தமுள்ள 1016 வாக்காளர்களில் இதுவரை 316 பேர் மட்டுமே வாக்களித்துள்ளனர். மறியலில் ஈடுபட்டுள்ளவர்களிடம் மணப்பாறை எம்எல்ஏ அப்துல்சமது பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்.

# கொடைக்கானல் ஏரியில் மிதந்த பெங்களூரு பெண்



**கொடைக்கானல், ஏப்.24:** கர்நாடகா மாநிலம், பெங்களூரு ஜெயா நகரை சேர்ந்தவர் நயனா ரஜினிஷ் (30). இவர் திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் அருகே பெருமாள்மலை பகுதியில் இயங்கும் தனியார் தியான மையத்திற்கு வந்து கடந்த சில நாட்களாக தங்கி பயிற்சி பெற்று வந்ததாக கூறப்படுகிறது. நேற்று கொடைக்கானல் நட்சத்திர ஏரி பகுதிக்கு வந்த இவர் திடீரென தண்ணீரில் குதித்தார்.

இதை கண்ட அப்பகுதியினர், பெண் ஒருவர் தண்ணீருக்குள் குதித்து தற்கொலை செய்து கொண்டார் என பதற்றமடைந்து உடனே படகு குழாம் நிர்வாகத்திற்கு தகவல் தெரிவித்தனர்.

அவர்கள் வந்து பார்த்த போது அவர் தண்ணீரில் மிதந்த நிலையில் யோகா செய்தது தெரியவந்தது. அவரை மீட்டு கொடைக்கானல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அங்கு பரிசோதித்த டாக்டர்கள் அவர் சிறிது மனநலம் பாதித்து இருக்கலாம் என தெரிவித்தனர்.

யோகா செய்வதற்கு ஏரியில் குதித்தாரா அல்லது தற்கொலை செய்து கொள்ளும் எண்ணத்தில் குதித்தாரா என போலீசார் விசாரிக்கின்றனர்.

# தேர்தல் சூழலில் உடல்நலக் கவனம் அவசியம்: கோடை வெயிலில் பக்கவாதத்தில் இருந்து தற்காத்து கொள்ள வேண்டும்: மதிய நேரங்களில் வெளியில் செல்வதை தவிர்க்க வேண்டும்

## தண்ணீர் அதிக அளவு குடிக்க வேண்டும்: மருத்துவர்கள் அறிவுறுத்தல்



**சென்னை, ஏப்.24:** தேர்தல் சூழலில் உடல்நலக் கவனம் அவசியம் என்றும் கோடை வெயிலில் பக்கவாதத்தில் இருந்து தற்காத்து கொள்ள வேண்டும் என மருத்துவர்கள் அறிவுறுத்தி உள்ளனர்.தமிழகத்தில் 2026ம் ஆண்டின் கோடைக்காலம் வழக்கத்தை விட முன்கூட்டியே தொடங்கி, தற்போது உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது. சென்னை, வேலூர், மதுரை, திருச்சி, ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களில் வெப்பநிலை 40 டிகிரி செல்சியஸ்க்கு மேல் பதிவாகி வருகிறது.

இந்த அதீத வெப்பம் மக்களின் இயல்பு வாழ்க்கையை பாதிப்பதோடு, கடுமையான உடல்நலச் சிக்கல்களையும் ஏற்படுத்தி வருகிறது. வெப்பம் அதிகரிக்கும்போது நமது உடல் தன்னை தானே தற்காத்துக் கொள்ள வியர்வை மூலம் வெப்பத்தை வெளியேற்றும். ஆனால், ஈரப்பதம் அதிகமாக இருக்கும்போதோ அல்லது நீண்ட நேரம் வெயிலில் இருக்கும்போதோ உடல் வெப்பநிலையைச் சீராக வைத்திருக்க முடியாமல் போகிறது. இதனால் தலைசுற்றல், வாந்தி, தாகம் அதிகரிப்பு, மயக்கம் போன்ற அறிகுறிகள் தோன்றலாம். மேலும், வெப்ப பக்கவாதம் (heat stroke) ஏற்பட்டு உயிரிழப்பு கூட ஏற்பட வாய்ப்பு உள்ளது.

நீரிழிவு பிரச்சினையும் வெயிலின் தாக்கத்தில் அதிகமாகக் காணப்படுகிறது. உடலில் உள்ள நீர் மற்றும் உப்புச் சத்து குறைவதால் சோர்வு, தலைச் பிடிப்பு, இதயத் துடிப்பு அதிகரிப்பு போன்ற பிரச்னைகள் ஏற்படும். குறிப்பாக, வெளியில் வேலை செய்பவர்கள், வயதானவர்கள் மற்றும் குழந்தைகள் இந்தப் பாதிப்புக்கு அதிகம் உள்ளாகிறார்கள். இதற்கு மேலாக, தோல் சம்பந்தப்பட்ட பிரச்னைகளும் அதிகரிக்கின்றன. நீண்ட நேரம் வெயிலில் இருப்பதால் தோலில் எரிச்சல், கருமை மற்றும் சூரியக் காய்ச்சல் (sunburn) போன்றவை ஏற்படுகின்றன. கண்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டு, வெப்ப அலையைக் கருத்தில் கொண்டு, வாக்குச்சாவடிகளில் வாக்காளர்களுக்கு நிழற்குடை வசதி, குடிநீர் வசதி மற்றும் முதலுதவி மருத்துவக் குழுக்களை தேர்தல் ஆணையம் தயார் நிலையில் வைத்திருந்தாலும், மக்கள் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும். கையில் தண்ணீர் பாட்டில் உடன் வைத்திருக்க வேண்டும்.

இது தொடர்பாக காவேரி மருத்துவமனை மருத்துவர் வெற்றிசெல்வன் கூறியதாவது: 'மனித உடலின் இயல்பான வெப்பநிலை 36.1 டிகிரி செல்சியஸ் முதல் 37.5 டிகிரி செல்சியஸ் வரை இருக்க வேண்டும்'. இந்த உடல் வெப்பநிலை மாறும்போது பல்வேறு பிரச்னைகள் ஏற்படும். இறப்பு ஏற்படுவதற்கும் வாய்ப்பு உள்ளது. உடல் அதிகம் வெப்பமாகும் போது சில அறிகுறிகள் தோன்றும். குறைந்த அளவு பாதிக்கப்பட்டால் வெப்பப் பிடிப்புகள் (heat cramps/ exhaustion) என்றும், அதிக அளவில் ஏற்பட்டால் வெப்பப் பக்கவாதம் (heat stroke) என்றும் அழைக்கப்படும்.

உழைப்பு வெப்பப் பக்கவாதம் (exertional heat stroke) வெப்ப அதிகமாக இருக்கும் நேரத்தில் வெளியில் வேலை செய்யும் நபர்கள், உடல் பயிற்சி செய்பவர்களுக்கு ஏற்படும். கிளாசிக் வெப்பப் பக்கவாதம் (classic/non-exertional heat stroke) முதியவர்கள், குழந்தைகள் அல்லது நாள்பட்ட நோயுள்ளவர்களுக்கு ஏற்படும்.உடல் வெப்ப நிலை அதிகரிப்பு, உடல் சோர்வு, உடல் வலி இருந்தால் இவை வெப்பப் பிடிப்புகளாகும். உடல் வெப்பநிலை 40 டிகிரி செல்சியஸ் கடந்து, நினைவு இல்லாத நிலை வெப்பப் பக்கவாதம் என்று சொல்லுவோம். ஒருவருக்கு வெப்பத் தொடர்பான பாதிப்பு ஏற்பட்டால், உடல் வெப்பநிலையை உடனடியாக சகஜ நிலைக்குக் கொண்டு வர வேண்டும்.

குறிப்பாக அவர்கள் ஆடையை கழற்ற வேண்டும், ஐஸ் இருந்தால் தலையில் வைக்க வேண்டும், தண்ணீரை உடல் முழுவதும் ஊற்ற வேண்டும் (cold water sponging), உடனடியாக மருத்துவ உதவி அளிக்க வேண்டும்.

இதில் இருந்து தற்காத்துக்கொள்ள வெப்பத்தில் வேலை செய்வதையோ அல்லது வெளியில் செல்வதையோ தவிர்க்க வேண்டும். ஆடையை இறுக்கமாக அணியக் கூடாது. தளர்வான, ஒளி நிற ஆடைகளை அணிய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.




# திருவிக நகரில் ரவுடிகளை இறக்கி பணப் பட்டுவாடா: பொற்கொடி ஆம்ஸ்ட்ராங் மீது திமுக வேட்பாளர் புகார்

**சென்னை, ஏப்.24:** திருவிக நகர் தொகுதியில் ரவுடிகளை இறக்கி பணப் பட்டுவாடா செய்ததாக பொற்கொடி ஆம்ஸ்ட்ராங் மீது திமுக வேட்பாளர் புகார் மனு அளித்துள்ளார்.

திருவிக நகர் சட்டப்பேரவை தொகுதியில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர் பொற்கொடி ஆம்ஸ்ட்ராங், வெளியூர்களில் இருந்து ரவுடிகளை இறக்கி வாக்காளர்களை மிரட்டுவதாகவும், போலி டோக்கன்கள் மற்றும் பணம் விநியோகித்து தேர்தல் நடத்தை விதிகளை மீறுவதாகவும் குற்றம் சாட்டி, அத்தொகுதியின் திமுக வேட்பாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன் இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர், தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும் சென்னை காவல் ஆணையர் ஆகியோருக்கு புகார் மனு அளித்துள்ளார்.

அதில் கூறியிருப்பதாவது: திருவிக நகர் தொகுதியில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர் பொற்கொடி ஆம்ஸ்ட்ராங், தேர்தல் நடத்தை விதிகளை முற்றிலுமாக மீறி செயல்பட்டு வருகிறார்.

குறிப்பாக வெளி மாவட்டங்களிலிருந்து ரவுடி கும்பலை தொகுதிக்குள் இறக்கி, அவர்கள் மூலம் மற்ற வேட்பாளர்களை பிரச்சாரம் செய்ய விடாமல் மிரட்டியதுடன், பெரம்பூர் பாரதி நகரில் உள்ள திருமண மண்டபத்தில் இந்த வெளியூர் நபர்களை தங்கவைத்து, அங்கிருந்து பொது மக்களுக்கு பணப்பட்டுவாடா செய்து வருகிறார்.

அதிமுக வேட்பாளர் தரப்பில் 71, 72-வது வார்டுகளில் வாக்காளர் குடும்பங்களுக்கு மாதந்தோறும் ரூ.10 ஆயிரம் மற்றும் குலவிளக்கு திட்டத்தின் கீழ் ரூ.2 ஆயிரம் வழங்கப்படும் என அதிமுக சின்னம் அச்சிடப்பட்ட போலி செக் டோக்கன்கள் விநியோகிக்கப்பட்டு மக்கள் தவறாக வழிநடத்தப்படுகிறார்கள்.

தண்ணீர் குடங்கள் மூலமாக ரகசியமாக பணப்பட்டுவாடா நடைபெற்றுள்ளது. நீதிமன்ற விசாரணையில் உள்ள தனது கணவர் மரண வழக்கை பயன்படுத்தி, தனது 3 வயது குழந்தையுடன் பிரச்சாரம் செய்து பெண் வாக்காளர்களிடம் அதிமுக வேட்பாளர் அனுதாபம் தேட முயல்கிறார்.

அதேபோல் தொகுதி முழுவதும் பொது இடங்கள், மின்சாரப் பெட்டிகள் மற்றும் அரசு சுவர்களில் தேர்தல் ஆணையத்தின் அனுமதியின்றி போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளன. பிரச்சாரத்துக்கு உரிய அனுமதியின்றி வெளிமாவட்ட வாகனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

திருவிக நகர் தொகுதியில் தேர்தல் நேர்மையாகவும், சுதந்திரமாகவும் நடைபெறுவதை உறுதி செய்ய, அடுத்த 48 மணி நேரத்துக்குள் தொகுதியில் தங்கியிருக்கும் வெளியூர் நபர்களையும், ரவுடிகளையும் அப்புறப்படுத்த வேண்டும். அதிமுக வேட்பாளர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாக்குச்சாவடியில் வாக்காளர்களை சாக்லெட் கொடுத்து வரவேற்ற ரோபோ



**சென்னை, ஏப்.24:** தமிழகத்தில் இன்று சட்டசபை தேர்தலுக்கான வாக்குப்பதிவு தேர்தல் நடக்கிறது. கோவை மாவட்டத்தில் உள்ள 10 தொகுதிகளிலும் காலை முதலே விறுவிறுப்பான வாக்குப்பதிவு நடைபெற்றது. மக்கள் ஆர்வமுடன் வந்து வாக்களித்து சென்றனர்.

கோவை கோர்ட்டு எதிரே உள்ள அரசு கலைக்கல்லூரியிலும் வாக்குச்சாவடி அமைக்கப்பட்டு இருந்தது. அங்கு மொத்தம் 4 பூத் அமைக்கப்பட்டு இருந்தது.

இந்த வாக்குச்சாவடி மையத்தில் வாக்களிக்க வந்த வாக்காளர்களை வரவேற்கும் விதமாக ரோபோ வைக்கப்பட்டிருந்தது. அந்த ரோபோ வாக்குச்சாவடி மையத்திற்கு வந்த வாக்காளர்களுக்கு சாக்லெட் கொடுத்து வரவேற்றது. அதன்பின்னர் பொதுமக்கள் தங்கள் வாக்கினை பதிவு செய்து சென்றனர்.

# தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல்: மனைவி குஷ்புவுடன் சென்று வாக்களித்த சுந்தர்.சி



**சென்னை, ஏப்.24:** தமிழக சட்டசபைக்கு ஒரேகட்டமாக இன்று (வியாழக்கிழமை) தேர்தல் நடைபெறுகிறது. இந்த தேர்தலில் மொத்தம் 4,023 வேட்பாளர்கள் களத்தில் போட்டியிடுகின்றனர். இந்த தேர்தலுக்காக தமிழகம் முழுவதும் 75 ஆயிரத்து 64 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு உள்ளன.

காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியதையடுத்து, மக்கள் அதிக ஆர்வத்துடன் தங்கள் ஜனநாயக கடமையை நிறைவேற்றி வருகின்றனர். நகரங்களிலும், கிராமங்களிலும் வாக்காளர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து வாக்களித்து வருகின்றனர். முதியவர்கள், பெண்கள், முதல் முறை வாக்களிப்பவர்கள் உள்ளிட்ட பலரும் உற்சாகமாக வாக்குச்சாவடிகளுக்கு வருகை தந்து தேர்தல் சூழலை உற்சாகமாக்கியுள்ளனர்.

இந்த நிலையில், சென்னை மந்தவெளிப்பாக்கத்தில் உள்ள ஸ்ரீ ராஜலட்சுமி பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடியில், இயக்குநரும் நடிகருமான சுந்தர் சி, அவரது மனைவி நடிகை குஷ்பு மற்றும் அவர்களின் மகளுடன் வரிசையில் நின்று தங்களது வாக்கினை பதிவு செய்தனர்.

பொதுமக்களுடன் இணைந்து அமைதியாக காத்திருந்து வாக்களித்த இந்த தம்பதியினர், அனைவரும் கட்டாயம் வாக்களிக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

PUBLISHED BY R.S ROSHINE PRINTED BY R.S. ROSHINE ON BEHALF OF R.S. ROSHINE PRINTED AT J.M. PROCESS, NO 29, V.N. DOSS ROAD, BORDERTHOTTAM, MOUNT ROAD, CHENNAI – 600002.
AND PUBLISHED FROM NO. 42/62, BUCHAMMAL STREET, 1ST FLOOR, NEW WASHERMENPET, TONDIARPET, CHENNAI, TAMILNADU – 600081. EDITOR: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM